பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 பங்குனி 8 ரபி அல்: 30 இதழ்: 39

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 21-3-77

அண்ணா சோயாப் பவுடர்

இது ஓர் சக்திமிக்க பானம் ஆரோக்கிய வாழ்விற்கு புரத சத்து நிறைந்த அண்ணா சோயாபானத்தைபருகுங்கள சகலவித அளவுகளிலும் எல்லா இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். இன்றே அண்ணா சோயாப் பவுடரை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துங்கள்.

விநியோகஸ்தர்கள்:

அண்ணா தொழிற்சாலை

இணுவில்.

தொலைபேசி: 7412

## இந்திய தேர்தல் முடிவு
### கட்சிகளின் கடைசிநிலை - 2 மணி

| | |
|---|---|
| காங்கிரஸ் — | 81 |
| இந்திய கம்யூனிஸ்ட் — | 03 |
| அ. அ. தி. மு. க— | 11 |
| முஸ்லிம் லீக்— | 00 |
| ஜனதா கட்சி | 81 |
| பழைய காங்கிரஸ்— | 01 |
| பாரதீயலோக்டல்— | 00 |
| தி. மு. க.— | 00 |
| மார்க்ஸிஸ்ட் கம்யூ.— | 03 |
| உதிரிக்கட்சிகள்— | 07 |
| சுயேச்சை— | 02 |

# ஜனதா கட்சி முன்னேறுகிறது; வடக்கில் காங்கிரஸ் கட்சி சரிவு!

## எம்.ஜி ஆர். கட்சி; காங்கிரஸ் தென்னாட்டில் வெற்றி

### சி. எஸ். மொரார்ஜி, சவான் தெரிவு

**இந்திய ஆட்சிமன்றத் தேர்தலில் இதுவரை வெளிவந்த முடிவுகளிலிருந்து எதிர்க்கட்சிக் கூட்டணி வெற்றி நடைபோடுகின்றது. ஆளும் காங்கிரஸ் கட்சிக்கு வடஇந்தியத் தொகுதிகளில் பல இடங்களில் தோல்வி ஏற்பட்டுள்ள போதிலும் தென்னிந்தியாவில் ஆந்திர பிரதேசத்திலும், தமிழ் நாட்டிலும் காங்கிரசுக்கும், காங்கிரசின் தோழமைக் கட்சியான அ. அ. தி. மு. கழகத்துக்கும் அதிக ஸ்தானங்கள் கிடைத்து வருகின்றன. இன்றிரவுக்குள் எந்தக்கட்சி ஆட்சிக்கு வருமென்பது தெரிந்துவிடுமென்று எதிர்பார்க்கலாம்.**

**தமிழ் நாட்டில் பழனித் தொகுதியில் மத்திய நிதி அமைச்சர்திரு. சி. சுப்பிரமணியம் தம்முடன் போட்டியிட்ட தி. மு. கழக வேட்பாளர் சாமிநாத கவுண்டரை இரண்டு லட்சத்து இருபதாயிரம் வாக்குகளால் தோற்கடித்தார்.**

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைத் தலைவராகக் கொண்ட அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அதிகப்படியான ஆசனங்கள் கிடைக்குமென்று அதிகார பூர்வமற்ற வட்டாரங்களிலிருந்து தெரிகிறது. நேற்றிரவு 12 மணிக்கு வெளிவந்த முடிவுகளில் 8 இடங்கள் அ. அ. தி. மு. கழகத்துக்கும் 9 இடம் காங்கிரஸ் கட்சிக்கும் கிடைத்தது.

ஜனதாக் கட்சித் தலைவர் மொராஜி தேசாய், முன்னாள் ஜனசங் கட்சித் தலைவரான ஜனதா கட்சி அமைப்பாளர்களில் ஒருவரான அத்துல் பிகாரி வாஜ்பாயி ஆகியோரும் மத்திய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம், வெளிவிவகார அமைச்சர் சவான் ஆகியோரும் இந்திய ஆட்சிமன்றத்துக்கு நடந்த ஆறாவது தேர்தலில் வெற்றியீட்டினர்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே பெரும் பரபரப்பையும் ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும் எதிர்க் கட்சிகளுக்குமிடையில் கடும்போட்டியையும் ஏற்படுத்திய ஆட்சிமன்றத்துக்கான ஆறாவது பொது தேர்தலின முடிவுகள் நேற்று மாலை ஆறுமணியிலிருந்து வெளி வந்து கொண்டிருக்கின்றன.

தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருக்கும் நிலையைப் பார்க்கும் போது பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் தலைமையிலான ஆளும் காங்கிரஸ் கட்சி வெற்றிபெறுமா அல்லது திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணியான ஜனதா கட்சி வெற்றிபெறுமா என்று சொல்ல முடியாதபடி ஏற்றமும் இறக்கமுமாக முடிவுகள் வந்து கொண்டிருக்கின்றன.

### சி. எஸ்ஸும் சவானும்

நேற்று மாலைவரை வெளி வந்த முடிவிகளில் பழனித் தொகுதியில் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் தம்முடன் எதிர்த்துப் போட்டியிட்ட தி. மு. கழக வேட்பாளரை சுமார் 2 லட்சத்து 21,768 மேலதிக வாக்குகளால் வெற்றியீட்டினார்.

மகாராஷ்டிரத் திலிருந்து வெளிவிவகார அமைச்சர் திரு. வை. பி. சவான் சுமார் 94 ஆயிரம் வாக்குகளால் வெற்றியீட்டினார்.

### முன்னாள் துணைமந்திரி தோல்வி

முன்னாள் உணவு விவசாய துணை அமைச்சர் திரு. ராஜ் பகதூர் தோல்வியடைந்தார்.

ஆந்திரப் பிரதேச முன்னாள் முதல் அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் காங்கிரஸ் வேட்பாளராவார். ஆந்திர பிரதேசத்தில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளில் காங்கிரஸ் கட்சிக்கே பெரும்பான்மையான இடங்கள் கிடைத்துள்ளன.

### 2 லட்சம் மேலதிகம்

உத்திரப்பிரதேசத்தில் ஒரு தொகுதியில் ஜனதா கட்சி வேட்பாளரான மணிராம்பால் தம்முடன் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை இரண்டு லட்சத்துப் பதினாயிரம் வாக்குகளால்தோற்கடித்தார்.

குஜராத்தில் மகாத்மாகாந்தி பிறந்த போர்பந்தர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரை ஜனதாகட்சி வேட்பாளர் தோற்கடித்தார்.

### மொரர்ஜி வாஜ்பாயி

குஜராத்தில் சூரத்தொகுதியில் போட்டியிட்ட ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் தம்முடன் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரை இருபத்தோராயிரம் வாக்குகளால் தோற்கடித்தார்.

புதுடில்லித் தொகுதியில் போட்டியிட்ட ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான அத்துல் பிகாரிவாஜ்பாயி காங்கிரஸ் வேட்பாளரை 80,000 வாக்குகளால்தோற்கடித்தார்.

## தமிழ்நாட்டில் ஊர்வலத்துக்கு தடை

புதுடில்லி, மார்ச் 20

தமிழ்நாட்டில் பொதுக் கூட்டம், ஊர்வலம், ஆர்ப் பாட்டங்களுக்கு இருந்துவந்த கட்டுப்பாடு மேலும் பதினைந்து நாட்களுக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

பட்னாவில் ஜெயப்பிரகாஷ் நாராயண் வாக்குச் சாவடி ஒன்றுக்குச்சென்று தமது வாக்குகளைப் பதிவுசெய்தார். (ஆ)

### பழனியில் ஸி, சுப்பிரமணியம் வெற்றி

பழனித்தொகுதியில் மத்திய நிதி அமைச்சர் திரு. ஸி. சுப்பிரமணியம் தி. மு. க. வேட்பாளரான சாமிநாத கவுண்டரை 2லட்சத்து 21ஆயிரத்து 768 அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெற்றார். தி.மு. க. வேட்பாளருக்கு 1லட்சத்து 30 ஆயிரத்து 129 வாக்குகள் வாக்குகள் கிடைத்தன.

### தஞ்சாவூரில் அ. அ. தி. மு. க.

தஞ்சாவூரில் அ. அ. தி. மு. க. வேட்பாளரான எஸ். ஜே. வி. சோதசுந்தரம் 2 லட்சத்து 89 ஆயிரத்து 59 வாக்குகளால் தி. மு. க. அபேட்சகர் திரு. என். கணேசனை தோற்கடித்தார்.

### இராமநாதபுரத்தில் அ. அ. தி. மு. க.

இராமநாதபுரத்தில் திரு சி. பி. அன்பழகன் (அ. அ. தி மு. க.) 2 லட்சத்து 97 ஆயிரத்து 612 அதிகப்படி வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார். இவருடன் போட்டியிட்ட தி. மு. க. வேட்பாளர் எம். எஸ். ஜே. சத்தியேந்திரனுக்கு 1 லட்சத்து 22 ஆயிரத்து 482 வாக்குகள் கிடைத்தன. சுயேட்சை வேட்பாளர் அப்துல்காதருக்கு 2095 வாக்குகள் கிடைத்தன,

### திருநெல்வேலியில் அ.அ.தி.மு.க

திருநெல்வேலியில் அ.அ.தி. மு.க. வெற்றிபெற்றுள்ளது. அ.அ.தி.மு.க அபேட்சகர் ரி, வி.அருணசலத்துக்கு1லட்சத்து 82 ஆயிரத்து 692 அதிகப்படி வாக்குகள் கிடைத்தன. தி.மு.க. வேட்பாளர் கதிரவனுக்கு 1லட்சத்து 21ஆயிரத் 868 வாக்குகள் கிடைத்தன.

### பெரியகுளத்தில் அ.அ.தி. மு.க

பெரியகுளத்தில் அ.அ.தி. மு.க. உறுப்பினர் இராமசாமி வெற்றிபெற்றார். இவருடன் போட்டயிட்ட தி.மு.க உறுப்பினர் பழனிவேலுக்கு 1லட்சத்து 23ஆயிரத்து 208 வாக்குகளும் அ. அ. தி. மு. க. வேட்பாளருக்கு 3 லட்சத்து 28 ஆயிரத்து 60 வாக்குகளும் கிடைத்தன. மூன்று சுயேட்சையாளர்களும் போட்டியிட்டனர்.

### கோயம்புத்தூரில் இந்திய கம்யூனிஸ்ட்

கோயம்புத்தூரில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சியைச்சேர்ந்த திருமதி பார்வதி கிருஷ்ணன் 2 லட்சத்து 67 ஆயிரத்து 424 வாக்குகளால் ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளரான எஸ். ஜே. வி. இலட்சுமணனைத் தோற்கடித்தார்.

### பொள்ளாச்சியில் அ. அ. மு. தி. க.

பொள்ளாச்சியில் அ. அ.தி. மு. க. கே. ஏ. ராஜன் தி. மு. க. வேட்பாளரான சி. டி. தண்டாயுதபாணியை 1 லட்சத்து 24 ஆயிரத்து 194 வாக்குகளால் தோற்கடித்தார்.

### கோபிச்செட்டுப் பாளையத்தில் காங்கிரஸ்

கோபிச்செட்டுப் பாளையத்தில் காங்கிரஸ் வெற்றிபெற்றது. காங்கிரஸ் வேட்பாளர் கே. இராமசாமி, ஸ்தாபன காங்கிரஸ் கறுப்பையா சாமியை 1 லட்சத்து 5 ஆயிரத்து 5?8 வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### தென்காசியில்காங்கிரஸ்

தென்காசியில்(தனி) காங்கிரஸ் அருணசலம் வெற்றி பெற்றார் இவருக்கு 3லட்சத்து 5ஆயிரம் வாக்குகளும் ஸ்தாபன காங்கிரஸ் ராஜேந்திரனுக்கு 1லட்சத்து 18,193 வாக்குகள்கிடைத்தன.

### மாயவரத்தில் காங்கிரஸ்

மாயவரத்தில் காங்கிரஸ் குடந்தை ராமலிங்கம் 74,265 வாக்குகளால் ஸ்தாபனகாங்கிரஸ் கோவிந்தசாமியை வெற்றிபெற்றார். இவருக்கு 2லட்சத்து 72ஆயிரத்து வாக்குகளும் கோவிந்தசாமிக்கு 1லட்சத்து 97ஆயிரத்து 935 வாக்குகளும்கிடைத்தன.

### மதுரையில் காங்கிரஸ்

மதுரையில் காங்கிரஸ் ஆர். வி. சுவாமிநாதன் 2 லட்சத்து 99 ஆயிரத்து 305 வாக்குகளால் காங்கிரஸ் பி. இராமமூர்த்தியை 1 லட்சத்து 64 ஆயிரத்து 969 வாக்குகளால் வெற்றிபெற்றார்.

### ராயபுரத்தில காங்கிரஸ்

ராயபுரத்தில் காங்கிரஸ் தேவராஜன் 2லட்சத்து 5 ஆயிரத்து 15 வாக்குகளால் ஸ்தாபன காங்கிரஸ் வெங்கடாசலத்தை வென்றார். வெங்கடாசலத்துக்கு கிடைத்த மொத்தவாக்குகள் 1லட்சத்து 724 ஆகும். (ஆ)

### தமிழ்நாட்டில் கடைசி நிலை

திருச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் எம். கலியாணசுந்தரம், நாகர்கோயிலில் பழைய காங்கிரஸ் குமரி அனந்தன, கிருஷ்ணகிரியில் அ. அ. தி. மு. க.பெரியசாமி திருச்செங்கோடு அ. குழந்தைவேலு (அ.அ.தி.முக. திண்டுக்கல் மாயதேவர் (அ. அ. தி. மு. க) பாண்டிச்சேரி பாலா பழனூர் (அ. அ. தி. மு. க.) சிவகாசி ஜெயலட்சுமி (காங்கிரஸ்)

வேலைக்கு உடனே ஆட்கள்
தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு உடனடியாக பவுளர், கெல்ப்பர் தேவை. பவுளர்களுக்கு ரூபா 5/-இருந்து 6/- வரையும். கெல்ப்பர்களுக்கு ரூபா 8/- இருந்து 9/- வரை. வேலையைப் பொறுத்து வழங்கப்படும். நேரில் வரவும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி.
5722


# கேள்வி அறிவித்தல்

## பண்டத்தரிப்பு பட்டண சபை

## சந்தைக்கடைகளில்

## வியாபாரம் செய்யும் உரிமை

1-5-77 முதல் 31-12-81 வரை பண்டத்தரிப்பு சந்தையில் உள்ள கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான கேள்விகள் 7-4-77 காலை 10-00 மணி வரை பண்டத்தரிப்பு பட்டண சபை அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 6-!-77 பிற்பகல் 2-30 மணி வரை கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 10/-ம், கேள்விப் பிணைப் பணமாக ரூபா 250/-ம் செலுத்தியதின் பேரில் வழங்கப்படும்.

கேள்வி நிபந்தனைகளையும் மற்றும் விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சோ. அருணாசலம்.
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு
பட்டண சபை.

பட்டணசபை அலுவலகம்,
பண்டத்தரிப்ப,
16-3-77.

### அட்டவணை

| கடை இல. | வியாபாரம் | | ஒவ்வொரு கடையினதும் மாதாந்த வாடகை |
|---|---|---|---|
| 1, 2, 5 | பலசரக்கு மணிக்கடை (Fancy Goods) | ரூபா | 90-00 |
| 3, 4 | உள்ளூர் மரக்கறி வகைகள், உள்ளூர் உற்பத்தி வகைகள், மலைநாட்டு மரக்கறி வகைகள் | ரூபா | 9 -00 |
| 6, 7 | மின்சாரப் பொருட்கள் அல்லது ஆங்கில மருந்து வகைகள் அல்லது இரும்புக்கடை அல்லது காலணி | ரூபா | 75-00 |

5750

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 14276

(i) முத்துத்தம்பி தவரத்தினம் பெண்
(ii) விமலாதேவியும், கலட்டி,
வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிராக

மாரிமுத்து கனகசபை, 151/13, ஆத்திசூடி வீதி,
கலட்டி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B / 14276-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 29-ம்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 2241/-ம் 14-2-74 தொடக்கம் 15-5-75 வரைக்கும் ரூபா 1500/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின்முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 457-26 சதம். இம்முழுத் தொகையிலும் ரூபாய் 1000/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை வடகிழக்கிறை ''சூரியன்குன்று'' குளி 17·3 பயிர்களும். இது 1967-ம் ஆண்டு வைகாசி மாதம் 6-ந் திகதி சேவயர் க. ஐயாறுவால் தயாரித்த 727-ம் இலக்கப் படத்தில் 2-ம் துண்டு. இந்தக்குளி பதினேழு தசம் இரண்டிற்கும் எல்லை கிழக்கு கணபதி நாகமுத்துவின் ஆதனம், வடக்கு கணபதிப்பிள்ளை நடராசாவிற்கும் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள், மேற்கு வல்லி கம்பிராசாவின் ஆதனம், தெற்கு குறித்த படத்தில் 3-ம் துண்டு ஆகிய பாதையில் இதற்குரிய பங்கும் முழுக்காணியின் தெற்கே இராமு சுந்தரத்தின் காணிக்குள் இருக்கும் கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
மதிப்பாளரும்.

தொல்புரம்,
19-1-77.
5738

## பட்டிருப்பு இளைஞர் பேரவை

பட்டிருப்பு, ஞாயிறு

பட்டிருப்புத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவை செயற்குழுக் கூட்டம் அடுத்த மாதம் 3 ம் திகதி தொகுதி அமைப்பாளர் திரு. மதுரநாயகம் தலைமையில் திரு. கோபாலகிருஷ்ணன் இல்லத்தில் நடைபெறும்.

## அறிவித்தல்

### பகிரங்க ஏலவிற்பனை

24 ஸ்ரீ 185 பென்ஸ் லொறியின் பழைய பொடி (Lorry Body) 77-03-25-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் வைத்து பகிரங்கஏலத்தில் விற்பனைசெய்யப்படும். லொறி பொடி சங்க வேலை நேரத்தில் தலைமைக்காரியாலயத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்.
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்.
5749

## பொருட்களின் விலைகள் இறங்கின!

கொழும்பு, ஞாயிறு

மேலும் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் இறக்குமதிப் பொருட்களின் விலைகளை வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன வர்த்தமானி மூலம் குறைத்துள்ளார்.

குழந்தைகளுக்கான உணவு வகைகள், பால் போத்தல்கள், பால் போச்சிகள், குடைகள், ரயர்கள், ரியூப்கள் முதலானவைகளின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

ஷேர்ட், பப்ளின் ஆகியவற்றின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. பருத்தித்துணி யார் ஒன்றின் ஆகக்கூடிய விலை 7 ரூபா 50 சதமாகும். (உ)

## யாருடையது?

சங்கானையைச் சேர்ந்த செல்வன் கே. ஜெயரஞ்சன் என்பவரால் யாழ். முனீஸ்வரன் வீதியில்கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## வரி விளம்பரம்

### தேவை

கோப்பாய் சந்தியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றிற்கு காசாளர் உடனடியாகத் தேவைப்படுகிறது. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். நியூபரிஸ் ஹோட்டல், கோப்பாய் சந்தி. 5726

யாழ்ப்பாணத்தில் பிரபலமான ஸ்தாபனம் ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை. மின்சார, இரும்புபொருட்கள் விற்பனை செய்வதில் நன்கு அனுபவமும், G. C. E. பரீட்சையில் சித்தியெய்தியவராயும் வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதில் தேர்ச்சியும் இருத்தல் வேண்டும். தொழில் நுட்பக்கல்லூரியில் மின்சாரவியல் சித்தியெய்தியிருப்பவர்க்கு முதலிடம் கொடுக்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 5742 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 5742

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஒலிம்பிய ஸ்ரண்டாட் ஆங்கில தட்டச்சு இயந்திரம் ரூபா 1050/- அல்லது கிட்டிய தொகை. செல்வராஜன், செட்டித்தறை வீதி, நெல்லியடி, கரவெட்டி. 5733




# பாகிஸ்தான் கலவரம் மோசமாகிறது: ஊரடங்கு அமுல்; 150 பேர்பலி

இஸ்லாமாபாத், மார்ச் 20 கராச்சியில் நடைபெற்ற வன்முறைச் செயல்களின் போது 150 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 150க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற பாகிஸ்தான் பொதுத்தேர்தல் நேர்மையாக நடத்தப்படவில்லையென்றும் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ தமது பதவியை ராஜினமாச் செய்யவேண்டுமென்றும் கோரி எதிர்க்கட்சிகளின் கூட்டணி நடத்திய ஆர்ப்பாட்டங்களின் போதே மேற்படி அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பலரும் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**பூட்டோ எச்சரிக்கை**

இக் கலவரங்கள் குறித்து பிரதமர் பூட்டோ குறிப்பிடுகையில், ''வன்முறையைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் சட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றுவதற்கு அரசாங்கம் தயங்காது என்றும் சொன்னர்.

கராச்சியில் உள்ள ஒரு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது. (உ)

## கையில் ஆயுதத்துடன் கொலையுண்டுகிடந்த அதிபர்

### தற்கொலை கமாண்டோக்களின்செயல்

லண்டன், மார்ச் 20 தமது அறையில் படுகொலை செய்யப்பட்டுக் கிடந்த கொங்கோ அதிபர் திரு. மரியன் என்கொபே கையில் ஆயுதம் ஒன்றுடன் காயங்களுடன் காணப்பட்டமையால் அவர் கொலையாளிகளுடன் போராடியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலைப்படைக் கமாண்டோக்களினலேயே இவர் கொலைசெய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

38 வயதான இவர் கடந்த 68-ம் ஆண்டு நடைபெற்ற இராணுவப் புரட்சியின் பின் அதிபராகப் பதவி ஏற்ருர்.

இவரின் கொலையை அடுத்து கொங்கோவில் நிர்வாகத்தைக் கவனிக்க 11 பேர் கொண்ட சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (இ)

## சுதந்திரம்

பிரான்ஸ், மார்ச் 20 பிரான்ஸின் கடைசிக் குடியேற்ற நாடான அபாஸிபாஸ் எதிர்வரும் ஜூன் மாதம் சுதந்திரமடைகிறது. (உ)

## துருக்கிய விமானம் கடத்தல்

பெய்ரூட், மார்ச் 20 150 பயணிகளுடன் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்ததுருக்கிய விமானம்ஒன்றை மூன்று ஆயுதம் தாங்கியஇளைஞர்கள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

பெய்ரூட் விமானநிலையத்தில் விமானத்தை இறங்கச் செய்த கடத்தல்காரர்கள் அங்கு விமானத்திலிருந்த 150 பயணிகளை விடுவித்தனராம். கடத்தலில் ஈடுபட்டவர்கள் பெய்ரூட் பொலிஸில் சரணடைந்தனர். (இ)

## இவருக்கும் தொடர்பு உண்டா?

லண்டன், மார்ச் 20 கொங்கோ ஜனதிபதி திரு. மரியன் என்கோபே படுகொலை செய்யப்பட்டதில் கொங்கோ ராஜ்ய சபைத் தலைவர் லியாத்துக்கும் சம்பந்தம் உண்டா என்பதுபற்றி பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (உ)

## நில அதிர்ச்சி

மணிலா, மார்ச் 20 பிலிப்பைன்சில் நேற்று திடீரென நில அதிர்ச்சி ஏற்பட்டது என அறிவிக்கப்பட்டது. இதனுல் மணிலாவில் பல வீடுகள் சேதமுற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## திடீர் சோதனையில் மல்லி சிக்கியது

யாழ்ப்பாணம், திங். பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 94 ருத்தல் மல்லியை யாழ்நகர் வர்த்தக நிலையம் ஒன்றில்இருந்து விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் கைப்பற்றினர்.

பிரஸ்தாப வர்த்தகர் மல்லியைக் கையிருப்பில் வைத்துக்கொண்டு விற்க மறுத்ததனையடுத்து இத்திடீர் சோதனை நடத்தப்பட்டதாக விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி தெரிவித்தது.

இத்திடீர் சோதனைக்குக்குழுவில் உதவிக்கட்டுப்பாட்டதிகாரி திரு. வல்லிபுரம், திருவாளர்கள் ஜேசுதாசன், அழகேந்திரன், சிதம்பரநாதன் ஆகியோர் அடங்கியிருந்தனர். (உ)

## பிரதமர் இந்திராவுக்கு காரசாரமாக கடிதம் எழுதி விட்டு தீமூட்டி தற்கொலை!

புதுடில்லி, மார்ச் 20 இந்திய அவசரகாலச் சட்டத்தையும் 'மிசா'சட்டத்தையும் கண்டித்து பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்திக்குக் காரசாரமாக கடிதம் எழுதிவிட்டு தம் உடல்மீது மண்ணெண்ணையை ஊற்றித் தற்கொலை செய்துகொண்ட சர்வோதய ஊழியர் ஒருவர் பற்றிய விபரம் இப்போது வெளிவந்துள்ளது.

சுமார் 60 வயதுடைய திரு. பிரபாகர்சர்மா என்ற அந்த சர்வோதய ஊழியர் சிறந்த ஓவியருங்கூட.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றிய முழுவிபரமும் அவசரநிலை தளர்த்தப்பட்ட பின்னர் இப்போது வெளிவந்துள்ளது. விவரம் வருமாறு:

தமது வண்ண ஓவியங்களை விற்று லட்சக்கணக்கில் சம்பாதித்து வந்த அவர், அந்தப் பணம் முழுவதையுமே கிராம சேவைக்காகச் செலவிட்டு வந்தார்.

அவருடைய சொந்தச் செலவுக்காக அவர் பெற்றுக்கொண்டது மாதம் ரூ.75 தான். அதை வைத்து அவர் வாழ்ந்து வந்தார்.

நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப்பின் இயற்றப்பட்ட சட்டங்கள் அவர் மனத்துக்கு மிகவும் வேதனை அளித்தன.

தனக்குச் சொந்தமாக இருந்த சொத்துக்களையெல்லாம் அவர் தானம்செய்துவிட்டார். தம்மிடம் கடைசியாக இருந்த ரூ.1500யும் யார் யாருக்கு தரவேண்டும் என்பதை எழுதிவைத்துவிட்டார்.

அக்டோபர் 13-ந் தேதி நள்ளிரவில் தம் உடலில் மண்ணெண்ணையை ஊற்றி தீவைத்துக்கொண்டார்.

அவருடைய விருப்பத்துக்கு மாருக அவரை காந்தி வைத்திய விஞ்ஞான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு இரண்டுமணி நேரத்துக்குப் பின் அங்கு அவர்காலமானர்.

பிரதமருக்கு அவர் ஒரு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறர்.

அந்தக் கடிதத்தில் அவர் எழுதியுள்ளதாவது: ''இந்திராகாந்தியின் அரசாங்கம் கடவுள் தன்மையற்ற அரசாங்கம்,மனிதத்தன்மையற்ற அரசாங்கம். முரட்டுப் பலத்தைப் பயன்படுத்தி மக்களின் சுதந்திரத்தையெல்லாம் பறித்துக்கொண்டது. பத்திரிகைகளின் வாயை அது அடைத்தும் விட்டது. உண்மையானவைகளையும் மகத்தானவைகளையும் காலால் நசுக்கிவிட்டது.

'முகலாயர் ஆட்சியில் இப்படிப்பட்ட காட்டுமிராண்டித்தனம் நடந்திருந்தால் நான் வியப்படைந்திருக்கமாட்டேன்.

'ஆனல் உங்கள் கட்சி மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் அஹிம்சையில் பயிற்சி பெற்ற கட்சி.

''நாணயம், இந்திய பண்பாடு, ஒழுக்கம், மனிதசகோதரத்துவம், நீதி ஆகியவைகளுக்கெல்லாம் மத்திய அரசில் இடம் இல்லை. வெட்க உணர்வையெல்லாம் அது இழந்துவிட்டது என்று நான் நம்புகிறேன். இவைகளையெல்லாம் மௌனமாக சகித்துக்கொண்டிருந்தால் முனிபுங்கவர்களின் நாடான இந்தியா இந்தியாவாக இராது.

'மிசா' வானது மக்களை மட்டுமல்லாது அரசாங்க ஊழியர்களையும் கோழைகளாக்குகிறது. அரசாங்க ஊழியர்கள் கோழைகளாகவும், காட்டுமிராண்டிகளாகவும் ஆகிவிட்டார்கள். இப்போது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தைவிட நிலைமைமோசமாக இருக்கிறது. பிரிட்டிஷார் காலத்திலாவது கோர்ட்டுகளில் நம்மை நிறுத்தி விசாரித்தார்கள்.

**காந்தியின் கூற்று**

''இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு என்ன பரிகாரம் காண்பது என்பதை மகாத்மா காந்தி முன்பே கூறியிருக்கிருர். 5-1-22 'யங் இந்தியா' வில் ''சுதந்திர மனிதர்களாக வாழ முடியாவிட்டால் மரணமடைவதில் நாம் திருப்தியடையவேண்டும்'' என்று அவர் கூறியிருக்கிருர்.

'காந்தி அமைப்பின்பேரில், கிராமசேவைக்கு வந்தவன் நான். நம்முடைய பெரியவர்களெல்லாம் எப்படி நினைத்தார்களோ அப்படி ஒருநாள் இந்தியா உயரும். உலகிற்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கை அப்போது இருந்தது. இன்றோ இந்த நாட்டில் என்னுல்வாழக்கூட முடியாது. தலைக்குனிவான வாழ்க்கை வாழ்வதைவிடச் சாவதையே நான் விரும்புகிறேன்.

(6-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் வாக்குப்பதிவு

புதுடில்லி, மார்ச் 20 இந்தியத் தேர்தலில் வாக்குப் பதிவு மோசடி நடந்ததாகக் கூறப்படும் 43 வாக்குச் சாவடிகளில் மீண்டும் வாக்குப் பிரதம தேர்தல் கமிஷனர் திரு. பி. சுவாமிநாதனின் உத்தரவின்படி நேற்று சனிக்கிழமை 25 சாவடிகளிலும் இன்று 18 சாவடிகளிலும் மறு வாக்குப் பதிவு இடம்பெற்றது.

உத்தரப் பிரதேசத்தில் 8 வாக்குச் சாவடிகளிலும் பீகாரில் 29 வாக்குச் சாவடிகளிலும் மேற்கு வங்காளத்தில் 5 வாக்குச்சாவடிகளிலும் ஹரியானவில் ஒரு வாக்குச் சாவடியிலும் மறு வாக்குப்பதிவு நடைபெற்றதாம். (இ)

## பழச் செய்கை கடனுதவி

கொழும்பு,ஞாயிறு பழச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பழச் சபை பழச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு 13லட்சம் ரூபாவைக் கடனுக வழங்கியுள்ளது.

இலங்கைப் பழவகைகளை கொள்வனவு செய்வதற்கு பல வெளிநாடுகள் கொள்வனவுக் கட்டளைகள் அனுப்பி வைத்துள்ளனஎன பழச்சபை தெரிவித்தது. (உ)

# வாக்குமோசடி :24பேர்கைது; தமிழ்நாட்டில் அமைதி

## எம். ஜி. ஆரின் ஏஜன்ட் திடீர் மரணம்

சென்னை மார்ச். 20 தமிழ்நாட்டில் லோக்சபா தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வாக்களிப்புகள் அமைதியாக நடைபெற்றன

கடந்த புதன்கிழமை நடைபெற்ற முதல்கட்ட வாக்களிப்பில் 20 தொகுதிகளில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

மேற்படி 20 தொகுதிகளிலும் 1 கோடி 37 லட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். 68.2 சதவீதமானேர் வாக்களித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

**புதுக்கோட்டை முன்னணியில்**

புதுக்கோட்டைத் தொகுதியில் பெருமளவில் வாக்காளர் வாக்களித்தனர். இத்தொகுதியில் வாக்களிக்காதோர் தொகை மிகச் சொற்பமே.

தென் சென்னையில் முன்னுள் காங்கிரஸ் மாநில அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமனை எதிர்த்து தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதியின் மருமகனுன முரசொலி மாறன் போட்டியிடுகிருர். தென். சென்னையில் திரு. எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.இ.அ.தி மு.க. வேட்பாளர் நாஞ்சில் கே. மனேகரன், தி. மு. க. வேட்பாளர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பியை எதிர்த்து போட்டியிடுகிருர். தமிழ்நாடு ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் திரு. பி. ராமச்சந்திரன் மத்திய சென்னையில் போட்டியிடுகிருர். காங்கிரஸ் முன்னுள் மாநில அமைச்சர் திரு.ஒ.வி. அளகேசன் அரக்கோணத்திலும், கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி மதுரையிலும் போட்டியிடுகின்றனர்.

மத்திய நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் போட்டியிடும் பழனித்தொகுதி சகலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் முக்கிய தொகுதிகளிலொன்ருகும்.

**107 சுயேச்சை வேட்பாளர்**

தமிழ்நாட்டில் 39 தொகுதிகளிலும் 107 சுயேட்சை வேட்பாளரும் போட்டியிடுகின்றனர்.

தி. மு. க. முன்னுள் மாநில அமைச்சர்களான திரு. கே. ராஜாராம் சேலம் தொகுதியிலும், திரு. ராஜாங்கம் சிதம்பரத் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். சிதம்பரத்தில் நேரடிப்போட்டி நடைபெறுகிறது.

**92 வயது மூதாட்டி நகைப்புடன் கூறியது**

அரக்கோணத் தொகுதியில் வாக்குரிமைபெற்ற நாடோடிகளும், உடல் ஊனமுற்றோரும், வாக்களித்தனர். 92 வயது நிரம்பிய மூதாட்டி ஒருவர் வாக்களித்தபின் வாக்குச்சாவடிக்கு வெளியே நின்றிருந்தவர்களைப்பார்த்து ''சரியான ஆளுக்குத்தான் வாக்களித்திருக்கிறேன்'' என்று சிரித்தபடியே கூறினர்.

நீலகிரித் தொகுதியில் ஸ்ரீலங்காவில் இருந்துவந்து தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்யும் இந்திய வம்சாவழியினரும் வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

**ஆள்மாருட்டம் செய்ததாகக் கைதானேர்**

தமிழ்நாட்டில் வாக்களிப்பின்போது ஆள்மாருட்டத்தில்

[5-ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

நீ வயலில் எந்த விதையை விதைக்கின்றனையோ அந்த விளைவுதான் விளைந்து உன் வீட்டுக்கு வரும். கம்பை விதைத்து விட்டு கோதுமையைஎதிர்பார்க்கக் கூடாது. கருவேலை நட்டு சந்தன மரத்தைப் பெற முடியாது. அதுபோல நீ நன்மையேசெய்தால் உனக்கு நன்மையே வரும்; தீமையைச் செய்தால் தீமையையே அனுபவிப்பாய்.

— திருமுருக கிருபானந்தவாரியார்


# ஈழநாடு
THE EELANADU


## கப்பல் கட்டும் தொழில்

இலங்கையில் முதன் முதல் கப்பல் கட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, உல்லாசப்பயண அமைச்சு இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.

அமைச்சின் இத்திட்டத்தின்கீழ் முதலில் சிறு கப்பல்கள் கட்டப்படுமாம்.

வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் கப்பல்கள் கட்டும்முயற்சியில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இன்று உலகிலேயே கப்பல்கள் கட்டுவதில் ஜப்பான்தான் முதலிடம்வகிக்கிறது.

நமது அயல்நாடான இந்தியாவும் கப்பல் கட்டுவதில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நமது நாட்டில் சிறிய, பெரிய படகுகள் பல இடங்களிலும் கட்டப்படுகின்றன

இதற்கு இன்னமும் சரியான உதவியும் ஊக்கமும் அளிக்கப்படவில்லையென்றே சொல்லவேண்டும்.

வடமாகாணத்தில் காரைநகரிலுள்ள சீநோர் அபிவிருத்தித்திட்ட நிறுவனம் சிறந்த படகுகளை உற்பத்தி செய்கிறது.

சிமெந்துப் படகுகள், கண்ணாடியும் தும்பும் கலந்து தயாரித்த படகுகள் இப்போது கடற்றொழிலாளர்களால் உபயோகிக்கப்படுகின்றன.

இந்தப் படகுகளுக்கு வெளிநாடுகளிலும் மதிப்பு இருக்கிறது.

கப்பல்கட்டும் அமைச்சின் முயற்சியைச் செயலாக்குவதற்கான பொறுப்பு கொழும்பு டொக்யார்ட் லிமிட்டெட் ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஸ்தாபனம் வெளிநாடுகள் பலவற்றுக்கு உயர் தரப்படகுகளைக் கட்டிக்கொடுத்தும், இலங்கைக் கடற்படைக்கான அதிவேக காவற்படகுகளைக் கட்டிக்கொடுத்தும் சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறது.

சிறுகப்பல்களைக் கட்டக்கூடிய சகல வசதிகளும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கப்பல்கட்டும் தொழிலில் எமதுநாடு எப்போதோ ஈடுபட்டிருக்கவேண்டும்.

பல வருடங்களுக்கு முன்னரே பாய்க்கப்பல் கட்டி அமெரிக்காவுக்குச் சென்று வரலாறு படைத்தவர்கள் இலங்கையின் வடக்குக் கோடியிலுள்ள வல்வெட்டித்துறை மக்கள்.

இன்றும்கூட உதவியும் ஊக்கமும் அளித்தால் வடக்கிலுள்ளவர்கள் கப்பல் கட்டும்தொழிலில் சுறுசுறுப்பாகஈடுபட்டுச் செயலாற்றுவார்களென்பதில் ஐயமில்லை.

கொழும்பில் கப்பல்கள் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாட்டின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் நிச்சயம் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்.

கப்பல்கட்டும் தொழிற்சாலை ஒன்றுமட்டும் போதாது. இந்த முயற்சியில் ஈடுபடவேறு நிறுவனங்கள் முன்வந்தால் அதற்கும் அமைச்சின் ஆதரவு கிடைக்கும் என்று நம்பலாம்.

## லக்ஸ்பிறே விற்க மறுத்தார்: 2500 ரூபா அபராதம்!

மட்டுவில், ஞாயிறு கடைக்குள் லக்ஸ்பிறே டின்களை வைத்துக்கொண்டு, விற்க மறுத்த வியாபாரிக்கு, கிளிநொச்சி நீதவான் திரு. இராஜநாயகம் 2,500 ரூபாஅபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி பஸ்நிலையத்தில் உள்ள ஒரு கடையில் இரண்டரை றாத்தல் கொண்ட லக்ஸ்பிறே டின்களை வைத்துக்கொண்டு பொதுமக்கள் கேட்டபொழுது, 'இல்லை' என்று கூறப்பட்டதாம்.

யாழ்ப்பாணம் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு.நா.சண்முகம் கிளிநொச்சிபஸ்நிலையத்தைச் சேர்ந்த சரவணமுத்து என்பவர்மீது மேற்கண்டவாறு குற்றம்சாட்டி வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

### விலைக்கட்டுப்பாட்டாளர் எச்சரிக்கை

கொழும்பு,ஞாயிறு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படும் பிடவைகளை நடைபாதையிலோ' வர்த்தக ஸ்தாபனங்களிலோ வைத்து விற்பனை செய்வது சட்டவிரோதமானது என்றும் இவை சலுசலா ப.நோ. கூட்டுறவுச் சங்கங்கள் தோட்டச்சங்கங்கள் ஊடாகமட்டுமே விற்பனை செய்யப்பட முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தலை விலைக்கட்டுப்பாட்டாளர்கடந்த இரவு விசேட வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ளார்.

பாவனையாளருக்கு நியாயமான விதத்தில் பிடவைகள் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (உ)

### இன்று

வண்ணை. ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகோற்சவ 6-ம் திருவிழா தினமாகிய இன்று மாலை 6 மணி முதல் 7-30 மணிவரை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அவர்களின் ''திருவிளையாடற் புராண'' இன்னிசை விரிவுரையும் தொடர்ந்து ஸ்ரீ சுப்பிரமணியருக்கு விசேஷ பூஜையாகி ஆட்டுக்கடா வாகனத்தில் திருவீதி உலாவும் இடம் பெறும்.

ஒரு கண்ணோட்டம்

# இந்தியத்தேர்தல் முடிவுகள் யாரை ஆட்சியிலமர்த்தும்?

[தலைநகரிலிருந்து நமது விசேஷ நிருபர்]

கடந்தவாரம் நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத்தேர்தலின்முடிவுகள், இன்று வெளியாகின்றன. பாரதத்தின் வரலாற்றிலேயே மிகமிகக்கடுமையான போட்டியைக் கொண்ட இப்பொதுத்தேர்தலில், எந்தக்கட்சி ஆட்சியை அமைக்கும் என்பது இன்று நள்ளிரவுக்கு முன்னர் தெரிந்துவிடும். தேர்தலின் எல்லா முடிவுகளும் நாளை நள்ளிரவுக்குள் அறிவிக்கப்படும்.

இந்தியப் பொதுத்தேர்தல் கடந்தவாரம் 16ம்திகதி ஆரம்பமானது. 16, 18, 19, 20 என்று நான்குநாட்களாகநாட்டின் நாலா பக்கங்களிலும் நடைபெற்ற இத் தேர்தலில், மொத்தம் 31 கோடியே 80லட்சம் வாக்காளர்கள்இடம்பெற்றிருந்தனர். கடந்தகாலத்தேர்தல்களைவிட கூடுதலான வாக்காளர்கள் உற்சாகத்துடன் வாக்களிப்பில் கலந்துகொண்டனர் என்று, புதுடில்லிக்கு வந்துசேரும் மாநிலத்தேர்தல் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

### சில புள்ளிவிபரங்கள்

இந்திய நாடாளுமன்றமன்றத்தின் (லோகசபை)மொத்த ஆசனங்கள் 542. இதில் முதல் நாளான 16ம் திகதி புதன் கிழமை மட்டும், 300 தொகுதிகளில் சுமார் 19கோடி வாக்காளர்கள் கலந்து கொண்டனர். மிகுதி 242 தொகுதிகளிலும் மூன்று நாட்களாகத் தேர்தல் நடைபெற்றது. முதல்நாள் 300 தொகுதிகளில் தேர்தலில் கட்சிகள் நிலைமை பின்வருமாறு இருந்ததாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்:

சுமார் நூறு தொகுதிகள் காங்கிரஸ். சுமார் நூறுதொகுதிகள். ஜனதாகட்சி. மிகுதி நூறுதொகுதிகள் கம்யூனிஸ்ட் சுயேச்சை ஆதரவாளர்கள். தவிர, அடுத்தநாட்கள் நடைபெற்ற மிகுதி 242 தொகுதிகளுக்கான தேர்தலில், நூறு காங்கிரஸ்-ஜனதா நேரடிப் போட்டியென்றும் 140 சுயேட்சைஆதரவு என்றும்அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

வடகோடியில் அமைந்த காஷ்மீரிலிருந்து தென்கோடியில் உள்ள தமிழ்நாடுவரை, கிழக்கே நாகாலாந்திலிருந்து மேற்கே குஜராத்வரை நடைபெற்ற இப்பொதுத்தேர்தலில் சிக்கிம், அருணாசலப்பிரதேசம் ஆகிய இரண்டு தொகுதிகளின் முடிவுகள் முதலிலேயே வெளிவந்துவிட்டன. காங்கிரஸ் அபேட்சகர்கள்போட்டியின்றி இங்கு தெரிவாகினர்.

இந்தியநாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகவே இருந்தது. அண்மையில் இயற்றப்பட்ட அரசியல் சட்டத்திருத்தத்தின் எதிரொலியாக இக்கால எல்லை ஆறு ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டது. பாரதநாடு சுதந்திரம் அடைந்தபின்னர் இதுவரை நாடாளுமன்றத்துக்கு ஐந்து- 1952, 1957, 1962, 1967, 1971 ஆண்டுகளில் ஐந்து பொதுத்தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. 1971ல் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் ஆயுள் 1975ல் பூர்த்தியானபோதிலும், 1975ம் ஆண்டு ஜூன்மாதம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழ் பொதுத்தேர்தல் நடைபெறுவது ஒத்திவைக்கப்பட்டுகடந்த ஜனவரிமாதம் வெளியிடப்பட்ட அறிவிப்பைத் தொடர்ந்து இப்பொழுது தேர்தல் நடைபெற்றிருக்கிறது.

### தேர்தல் உடன்பாடு

காங்கிரஸ்கட்சி சில கட்சிகளுடன் சேர்ந்து தேர்தல் உடன்பாடு செய்தது. இதுபோல பிரதான எதிர்க்கட்சிகளும் கூட்டுஉடன்பாடுசெய்து காங்கிரஸுக்கு பெரும் சோதனையை ஏற்படுத்தும் வகையில் ஜனதாகட்சிஎன்று அமைத்துக் கொண்டன. கடந்த30ஆண்டுகளாக ஆட்சியை அலங்கரித்த காங்கிரஸ்கட்சி 493 தொகுதிகளில் போட்டியிட்டது. 49 தொகுதிகளை தனது கூட்டுக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்தது. இதுபோல ஜனதாகட்சி 423 தொகுதிகளில் போட்டியிட்டு மிகுதித் தொகுதிகளைத் தனது தோழமைக்கட்சிகளுக்கு விட்டுக்கொடுத்தது. இதன் மூலம் பரவலாக அபேட்சகர்கள் போட்டியிடுவதுதவிர்க்கப்பட்டு, இருபெரும் அணிகள் இத்தேர்தலில் மோதிக்கொண்டன. 1971ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல் 518 இடங்களிலும்2784பேர்போட்டியிட்டனர். இவ்வருடத்தேர்தலில் 543 இடங்களில் 2439 பேர் போட்டியிட்டனர். இவர்களில் 1200க்கும் அதிகமானவர்கள் சுயேச்சை அபேட்சகர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனைக் கவனிக்கும்போது; தனிப்பட்ட செல்வாக்குப்பெற்றவர்களும், கட்சி அரசியலே வேண்டாம் என்று கருதுவோரும் அரசியல்கட்சிவேட்பாளர்களைவிட அதிகம்ஆகும்.

அகில இந்தியரீதியில் பார்த்தால், காங்கிரஸ் 493, ஜனதா 123, வலது கம்யூனிஸ்ட் 91, இடது கம்யூனிஸ்ட் 53.மாநிலரீதியில், கட்சி அபேட்சகர்கள் 77, தேர்தல் சின்னத்துக்கென அங்கீகரிக்கப்படாத கட்சி வேட்பாளர்கள் 80, சுயேச்சை 1222. 17 மாநிலக்கட்சிகளில் அகாலிதளம், தி. மு. க., அகில இந்திய அண்ணா தி. மு. க. தேசிய மாநாட்டுக்கட்சி (காஷ்மீர், புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி(மகாராஷ்டிராவிலுள்ள) விவசாயிகள், தொழிலாளர் கட்சி குறிப்பிடத்தக்கவை. 100க்கும் அதிகமான தொகுதிகளில் நேரடிப்போட்டியும், 115 தொகுதிகளில் மும்முனைப் போட்டியும், 106 தொகுதிகளில் நான்குமுனைப்போட்டியும், நடந்தது. இரண்டுதொகுதிகளில் தலா 14 பேர்போட்டியிட்ட 'பெருமை'உண்டு.

### தமிழ்நாடு

தமிழ்நாட்டின் மொத்தத் தொகுதிகள் 39. புதுவை மாநிலத்தில் ஓர் ஆசனம். கடந்த 16ந் திகதி 20 தொகுதிகளிலும், 19-ம் திகதி 20 தொகுதிகளிலும் தேர்தல் நடந்தது.

தமிழ்நாட்டின்மொத்த வாக்காளர் தொகை 2 கோடியே 71 லட்சத்து 53,521 ஆகும். தஞ்சை, நாகபட்டினம் ரிசர்வ் தொகுதியில் மட்டும் தி.மு.க. அ.அ. தி. மு. க. நேரடிப் போட்டி நடந்தது. தவிர 5 தொகுதிகளில் மும்முனைப் போட்டியும், 7 தொகுதிகளில் நான்குமுனைப் போட்டியும இருந்தது. ஏழு தொகுதிகள் ஹரிஜனர்களுக்கு ஒதுக்கப்பட்ட தனித்தொகுதிகளாகும். தமிழ்நாட்டின் மொத்த வாக்குச் சாவடிகள் 15,255. இதில் ஆண்களுக்கு 4,061 என்றும் பெண்களுக்கு 4,065 என்றும் தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்தன. இங்குள்ள 20 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் 11 தொகுதிகளில் பெண் வாக்காளர்தான் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட 45000 பொலிசார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்கு உதவியாக பல'ரிசர்வ்'பாதுகாப்புப் படையினர் சேவையிலீடுபட்டனர். மோதல்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வாக்களிப்பு அமைதியாகவே நடைபெற்றது. ஒருசில அசம்பாவிதங்களைவிட பெரிதாக எதுவும் தமிழ்நாட்டில் நடக்கவில்லை!

### தேர்தல் முடிவு எப்படி இருக்கும்?

இந்திய பொதுத்தேர்தலை உன்னிப்பாகக் கவனித்த போது சில உண்மைகள் பளிச்சிட்டன. தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பதற்கு முன்னர், தேர்தலுக்கு முன்னர் நிலைமை எப்படி இருந்தது என்பதை முதலில் கவனிப்போம்.

நாடாளுமன்றத்தின் 'ஆட்சிக்காலம்' நீடிக்கப்பட்டதும், தேர்தலே இனி இருக்காது என்று எதிர்க்கட்சிகள் அங்கலாய்த்துக்கொண்டன. திடீர் என்று தேர்தல் அறிவிப்பு வந்தது. எல்லா அரசியல் கட்சிகளும் விழித்துக்கொண்டன. காங்கிரஸ், சில கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு கண்டது; ஜனதா என்ற பெயரில் கட்சி ஒன்று அமைக்கப்பட்டு எதிர்க்கட்சிகள்ஓரணியில்திரண்டன. ஆரம்பத்தில்எதிர்க்கட்சிகளின் கூட்டங்களுக்கு ஆதரவு அதிகமிருந்த போதிலும், கடைசி நேரத்தில் காங்கிரஸ் கூட்டங்களில் பெருமளவில் மக்கள் கலந்துகொண்டதை இங்குஅவதானிக்கவேண்டும். தேர்தல் நடைபெறுவதற்கு ஐந்து தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்கூட்ட மக்கள்தொகையைக் கவனிக்கும்போது யார் வெற்றிபெறுவார்கள்என்பதை நிச்சயப்படுத்த முடியாமலிருந்தது. இந்திரா காங்கிரஸ்கூட்டத்திற்கு பல லட்சம்எனருல் அதே அளவு மக்கள் தொகை ஜனதா கட்சிக் கூட்டத்துக்கும் வந்தது. இதனை இறுதி நேரத்தில், பிரதமர் இந்திராவுக்குச் சவாலாக நின்ற உத்தரப்பிரதேசத்திலும், பீகாரிலும்கூடக் காணக்கூடியதாக இருந்தது.

ஜனநாயகமா? சர்வாதிகாரமா? என்று ஜனதா கட்சி கேட்டது. குழப்பமா? அரசியல் ஸ்திரத்தன்மையா? என்று காங்கிரஸ் கேட்டது.

'அவசரகாலச் சட்டத்தினால்தான் நாடு பிழைத்தது' என்று பிரதமர் கூறினார். இந்தச் சட்டம்தான் நாட்டை அழித்தது என்றுஜனதாகட்சி குரல்எழுப்பியது. பதவிக்குவர பலவகையான தந்திரங்களை இவர்கள் கையாள மக்கள் பொறுமையுடன் இரண்டு தரப்பினரையும்' இனம் கண்டுகொண்டிருந்தனர்!

### இரண்டு பக்க நியாயம்

அவசர காலச்சட்டம் அவசியம் தேவைப்பட்டதா என்று சில முக்கியஸ்தர்களிடம் நான் கேட்டேன். நாடுஇன்று தைரியமாக நடைபோடுவது அதனால்தானே என்றனர் சிலர். பிரதமருக்கு இன்று சவாலாக வந்திருப்பது இச்சட்டம்தான், அவர் கட்சி தோல்வி பெறுமானால் இச்சட்டம்தான் முழுக் காரணமாக இருக்கும் என்றனர் மறுசாரார். ஐம்பதுக்கு ஐம்பது! கடந்தகாலத்தில் தம்மையும் அறியாமல் தவறு நடந்திருந்தால் மன்னிக்கும்படியும்

[5-ம் பக்கம் பார்க்க)

# சர்வோதய அடிப்படையில் பயன்தரும்சிலயோசனைகள்

இளம்பிள்ளை வேளாண்மை விடுவந்து சேருமா என்ற தலைப்பின்கீழ் 15-3-77 இதழில் ஒரு பெரியார் சில கருத்துக்களை வடிவாகக் கூறியதைப்பற்றி நாம் சிந்தித்தோம். அதனுடன் சேர்க்க வேண்டிய சில முன்னேற்றத்தைத் தரக்கூடிய எண்ணங்களை இங்கு கூறுகிறோம்.

1948-ம் ஆண்டு தொடக்கம் நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கு எமது கிராமங்கள்தோறும் சர்வோதய அடிப்படையில் ஏதாகிலும் உண்டாக்கப்பட்டிருக்கிறதா? குறைகளை மட்டும் கூறினல் போதாது.

இப்போதாகுதல் அதை உருவாக்கி எமது இளம்பிள்ளைகளைச் சிறுவயதில் இருந்தே சுதந்திர உணர்ச்சியுள்ளவர்களாகவும், கல்வி, அறிவு, குருபக்தி, தேசபக்தி முதலிய பெரிய நற்குணங்களுடன் வளர்த்தும் அவர்களுக்கு வேண்டிய பொருளாதாரம் போன்ற பல முன்னேற்றங்களை நாடெங்கும் சிறு சிறு நூறு நூறு வாக்காளர்கள் கொண்ட கட்சிபேதம், சாதிமதபேதம் இல்லாத, முதலாளி - தொழிலாளி பரஸ்பர அன்பு உள்ள ஸ்தாபனங்களாக சுயஉற்சாகத்தால் எங்கள் பிள்ளைகளை வளர்த்து எடுத்து பெரும் பொறுப்புணர்ச்சி உள்ள மனிதர்களாக ஆக்கவேண்டியது அவசியம்.

## விவாதமேடை

இந்தச் சுதந்திர சுயாட்சியாகிய சபைகளின் பிரதிநிதிகள்கொண்ட சபைகள் ஒவ்வொரு உள்ளூராட்சிப் பகுதிகளிலும் அச்சபையின் பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர், தொகுதிகளாகவும் அவர்களால்தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள்கொண்ட மாவட்ட சபைகளோ அதன் மேல் மாகாண சபைகளோ சமஷ்டி முறையில் சேர்ந்த இலங்கை அரசாங்கம் எல்லா மக்களின் முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் எப்போதும் மேலும்மேலும்வளர்க்கக்கூடியதாக ஏற்படுத்தப்படவேண்டும்.

இப்படியான ஸ்தாபனங்கள்மூலம் மக்கள் தனித்தனியாகத் தமது முன்னேற்றக் கொள்கைகளை வளர்க்கவும், தங்களுக்குள்ள குறைபாடுகளை நீக்கவும் தங்கள் சுயமொழிக் கல்வி, கலாசாரங்கள் போன்ற எல்லாவற்றையும் பெறவும் வாய்ப்புக்கிடைக்கும். தமக்குத் தேவையான முறையில் இலங்கையில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் தாமாகவே தமது ஊக்கத்தால் ஆக்க வேலைகளைச் செய்யவும் தடை இருக்கமாட்டாது.

க. சிவஞானரத்தினம்
உரும்பராய்

# பாமரர்விடிவுக்கு தீர்வுகாண எத்தனிப்பார் யாருமில்லை

தங்கள் பத்திரிகையில். தமிழர் விடுதலைக்கூட்டணியும் சுயாட்சிக்கழகமும் என்ற தலைப்பில் பக்கம்பக்கமாகக் கட்சிகளினது நடவடிக்கைகள் பற்றி ஏதேதோவெல்லாம் எழுதியிருந்தார்கள். அதோடு அடங்காத தமிழர் முன்னணியும் காசிஆனந்தனும் கட்டுக்கட்டாகக் கடிதங்கள் எழுதுப்பட்டார்கள். இவையாவையும் வாசிக்கவும் நாட்டில் பொதுத்தேர்தல் பற்றிப் பேசப்படுபவைகளையும் கேட்கவும் மனக்கொதிப்பும் அசட்டுச் சிரிப்பும் வராமலிருக்க முடியாது.

புருஷன் சண்டை போட்டு மனைவியுடன் இனிமேல் எதுவித தொடர்பும் வேண்டாமென்று வீட்டைவிட்டு ஓடிப் போகும்பொழுது, செம்பு வெளியிலே எடுத்துவை என்றவன் நிலைபோலவே அரசியலில் தமிழரசுக்கட்சியினதும் தமிழர் விடுதலைக்கூட்டணியினதும் மனநிலை இருப்பது அவர்களின் பேச்சிலும் செயலிலும் ஒரு அளவுக்குத் தொனிக்கிறது. இனிமேல் குடும்ப வாழ்க்கையே வேண்டாம் பிரிந்துபோகிறேன் என்று முடிவுக்கு வந்தவன், கலியாணத்தை ரத்துச்செய்து பிரிந்துபோக எத்தனிக்காமல் வசதிவந்தவேளைகளில் மாத்திரம் குடும்பம் பற்றிப் பேசித் திரியும் நிலைதான் சுயாட்சிக் கழகத்தினது. சிலநாள் குடும்ப வாழ்க்கையை இன்புற நடத்திப் பின் குடும்பம் சரிவராது என்று விட்டு வெளியேறித் தினமும் நல்லாகக் குடித்துக் கொண்டு திரியும் குடும்பத் திற்குதவாப் புருஷனின் அவலநிலைய அடங்காத் தமிழனின் நிலை. எப்படியானுலும் நாம்தானே குடும்பம்நடத்தித் தீரவேண்டுமென்ற அகங்காரத்திலே சுதந்திரக்கட்சியும் ஐக்கியதேசியக்கட்சியும் தங்களுக்கு தேவைஎன்றால் யாரையாகுதல் பிடித்துப் பயன்படுத்தித் தேவையில்லாத போது கலைத்துவிட்டு இருக்கும் அசட்டு நிலையுள்ள பெண்களின் நிலையிலிருந்து வாழ்கிறார்கள். இந்நாட்டு இடதுசாரிக்கட்சிகளோ இரு மனைவிமார்களுடன் வாழ்க்கை நடத்தும் நிலையிலிருந்து தத்தளிக்கிறது.

இந்நாட்டின் துரதிஷ்டவசமாக அரசியல்கட்சிகள் யாவும் ஆதிக்கம்தேடி அரசோச்சும் ஆசையில் அலைந்துதிரிகிறார்களே தவிர பாமரசனங்களின் விடிவுக்குத் தீர்வுகாண எத்தனிப்பார் எவருமில்லை. ஏதோ ஓர் புதுசக்தி உருவாகி இந் நாட்டைக் காப்பாற்று விட்டால் எமக்கு விமோசனமேயில்லை என்பது வெளிப்படை.

க. முருகையா
கொக்குவில்.

# இந்தியத்தேர்தல்—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முடிந்தபின்னர் அவற்றுக்குப் பரிகாரம் காண்பதாகவும் பிரதமர் கூறியிருந்தார். இதுபற்றிக் கேட்டேன். "எவ்வளவு பெருந்தன்மையுடன் கூறியிருக்கின்றார்; வாட்டர்கேட் விஷயத்தில்கூட நிக்ஸன் தனது பிழையை வெளியிடவில்லையே. பிரதமரின் மன்னிப்புக் கோரிக்கை நியாயமானது; நிச்சயம் மக்கள் செவிசாய்ப்பார்கள்" எனறனர் ஒரு சாரார். "உடைந்த கண்ணுடி உடைந்த கண்ணுடி தானே. வேண்டுமென்று தவறுசெய்துவிட்டுபிறகு மனுப்பலாமா? பிரதமருக்கே அழகா? மக்களை ஏமாற்ற நினைக்கின்றார். அவர்கள் தெளிவாக இருக்கின்றார்கள். மக்கள் கோழைகள் அல்லர்" என்றனர் மறுசாரார். ஐம்பதுக்கு ஐம்பது. தன்னையும் தனது ஆட்சியையும் பாதுகாக்கத்தானே அவசரகாலச் சட்டத்தை பிரதமர் கொண்டுவந்தார்... நீதி நியாயம்... பாரதப்பண்பு என்ருல், அலகபாத் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்றிருக்கவேண்டாமோ..." என்று இதே சாரார் கூறியபோது 'தராசு' வின் முள்ளு இவர்கள் பக்கம் ஒரு முறை வந்துபோயிற்று!

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் இந்திரா எவ்வளவோ கூறினர். அந்நிய நாட்டுத் தலையீடு பற்றியும், காங்கிரஸ் தோல்விபெற்ருல் நாடு அடகுவைக்கப்படும் என்றும் சொன்னுர். இது பற்றி நான் சில கட்சித் தலைவர்களிடம் கேட்டேன், "நாடு அவருக்கு மட்டும்தான் சொந்தமா? எங்களுக்கு நாட்டுப்பற்று இல்லையா? அமெரிக்கா, அமெரிக்கா என்று அச்சம் தெரிவிக்கிற பிரதமர், ரஷ்யாவுடன் மட்டும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யலாமா..." என்றுகேட்டுவிட்டு "ஆமா... நாங்கள் எல்லாம் மாருதி, நகர்வாலா பற்றி வாய் கிழிய மேடைகளில் கத்துகின்றோமே... பிரதமர் வாய் திறந்தாரா......?" என்று கூறியதும், மீண்டும் ஒருதடவை 'தராசு'வின் முள் இவர்கள் பக்கம் தலை சாய்த்தது!

எதிர்க்கட்சிகளின் ஒரே நோக்கம் பிரதமர் இந்திராவை பதவி இறக்குவது தானே? என்று நான் கேட்டபொழுது—

"அதுதான் தப்பு. இந்த நாட்டின் தேசத் தலைவர்களை எல்லாம் நீதி விசாரணை இல்லாமல் சிறையில் அனுதைகளாகப் பூட்டிவைத்தது மட்டும் சரியா? பிரதமர் கூறுவது மட்டும்தான் நீதியானது மற்றவர்கள் சொல்வது அநீதியான என்று நாங்கள் நினைப்பதற்கு... என் னமந்தைகளா...?" என்றுர்கள்.

"ஒரு சரியான திட்டமில்லாமல், தலைவர் இல்லாமல், அவசரம் அவசரமாகக்கூடி, அதுவும் இணைந்து கொள்ளாமல் உடன்பாடு மட்டும் செய்து கொண்டு பிரதமரை எதிர்க்கின்றார்களே; ஆறுஆண்டுகளுக்கு" முன்னரே இந்த 'ஞானோதயம்'. பிறந்திருக்கக் கூடாதா...? என்று நான் கேட்டதும், "பிரதமர் தவறுகள் விட்டது, அதுவும் இமாலயத் தவறுகள் செய்தது கடந்த 19 மாதங்களில்தானே! அதுவும் அவசரச் சட்டத்தின் கீழ்த் தானே! அப்போதுதான் தலைவர்கள் எல்லாம் 'உள்ளே' சென்றுவிட்டார்களே. தலைவர்களை வெளியே விட்டார், தேர்தல் பற்றி அறிவித்தார். ஜனதா கட்சி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது" என்று பதிலளித்தனர். இது இவ்வாறிருக்க;

## பத்திரிகைகள் எதிர்த்தன

அவசரகாலச்சட்டத்தின்கீழ் பத்திரிகைகளுக்குவாய்ப்பூட்டு போடப்பட்டது. தேர்தல் வந்தது. பிரதமர் இந்திராவுக்கு எதிராகவரிந்து கட்டிக்கொண்டு 'சிங்கம், புலி' மாதிரித்தான் பாய்ந்தன. ஓரிரு பத்திரிகைகளைத் தவிர, எல்லாப் பத்திரிகைகளும் பிரதமருக்கு எதிராகவே செயல்பட்டன. 'நடுநிலை' ஏடுகள் என்றுகூறிக் கொள்ளும் பிரபல ஆங்கில, ஹிந்தி ஏடுகள் கூட, பிரதமருக்கு எதிராகவே செயல்பட்டன. 'விளம்பரம்' என்ற ரீதியில் பெரும்பெரும் எதிர்க் கோஷங்களைப் பிரசுரித்தன! தேர்தலுக்குமுன் நிலைமை இப்படித்தான் இருந்தது.

தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும்? ஒரே மயக்கமாக இருக்கிறது. இந்திய மக்களே 'குழம்பி' இருக்கிறார்கள்.

மதுரை முதல் புதுடில்லிவரை நான் சென்று பார்த்தேன். பல தலைவர்களைச் சந்தித்தேன். எந்தக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெருது. ஜனதா கட்சி ஆட்சி அமைக்க, 'வசதிகள்' காணப்படுகின்றன. 300 ஆசனங்களை அது எதிர்பார்க்கிறது ஆனுலும் இந்திராகாங்கிரஸ் தெரிவுசெய்யப்பட்டால் அது அற்புதம்தான். அரசியலில் அற்புதங்கள் நிகழ்வதும் உண்டுதானே!

ஊர்பார்க்கச் சென்ற

# கோண்டாவில் இளைஞர் கல்லாற்றில் பலி!

மூதூர், ஞாயிறு

நண்பர்களுடன் ஊர் சுற்றிப் பார்க்க கிழக்கு மாகாணத்துக்கு வந்திருந்த கோண்டாவில் இளைஞர் ஒருவர் குளிக்கச் சென்ற இடத்தில் நீரில் மூழ்கி மரணமானுர்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்தது. செல்வரத்தினம் சுகுமார் என்ற இந்த 24 வயது இளைஞரின் சடலம் இறுதிச் சடங்குகளுக்கு அவரது சொந்த ஊருக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் நடந்த தினத்துக்கு முன்தினம் தமது நண்பர்கள் சிலருடன் ஊர் சுற்றிப்பார்ப்பதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற இவ்விளைஞர் கிழக்கிலங்கையில் கல்லாறு என்ற பகுதியில் நீர்ப்பாசன பொறியியலாளர் பங்களாவுக்கருகில் உள்ள வாய்க்காலில் நண்பர்களுடன் குளிக்கச் சென்ருராம். அச்சமயம் அவர் சுழியில் சிக்கி மூழ்கி விட்டாராம். அவரைத் தேடுவதில் நீர்ப்பாசன இலாகா ஊழியர்கள் முயற்சி எடுத்தனர். தற்செயலாக அவ்வழியாக வந்த மூதூர் நீதவான திரு. கே. ஞானசந்திரன் சம்பவத்தைக் கேள்வியுற்று இளைஞனைக் காப்பாற்றும்படி நீர்ப்பாசன ஊழியர்களைக் கேட்டுக் கொண்டார். இதன்பின் நீர்ப்பாசன ஊழியர் ஒருவர் பெரு முயற்சி எடுத்து இளைஞனின் உடலைத் தேடிக் கண்டுபிடித்து மீட்டுவந்தார். நீதிபதியும் அப்பகுதி பிரதம நீர்ப்பாசன பொறியியலாளரும் பெரு முயற்சி எடுத்து முதலுதவி அளித்தும் இளைஞனின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. நீதிபதியின் கட்டளைப்படி உடனடியாக மரணவிசாரணை நடைபெற்றது. கிளிவெட்டி மரணவிசாரணை அதிகாரி எம். கனகசபை விசாரணை நடத்தினுர்.

"பெற்ருேர் தம் பிள்ளைகளை தூர இடங்களுக்கு அனுப்பும்போது பொறுப்புள்ளவர்களுடன் அனுப்பவேண்டும். இந்த இளைஞனின் மரணம் அவரது நண்பர்களின் அசட்டையினுல் சம்பவித்துள்ளது. இவர்கள் ஒருவருக்குமே நீந்துவதற்குத் தெரிந்திருக்கவில்லை" என்று மரணவிசாரணை அதிகாரி கூறினுர். நீரில் மூழ்கி மரணம் சம்பவித்ததென தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிபதி திரு. ஞானச்சந்திரனின் ஏற்பாட்டின்மீது இளைஞனின் சடலம்ஊருக்கு அனுப்பப்பட்டது.

## வாக்குமோசடி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டதாக 24 பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. சென்னையில் 8 பேரும், மதுரையில் 6 பேரும், கோயம்புத்தூரில் 3 பேரும், திண்டுக்கல்லில் 2 பேரும், நீலகிரியில் ஒருவரும், சேலத்தில் 2 பேரும், புதுக்கோட்டையில் 7 பேரும், தஞ்சாவூரில் 7 பேரும் ஆள்மாறுட்டம் செய்ததாகக் கைதாகினர்.

### எம். ஜி. ஆர். ஆதரவாளர் திடீர் மரணம்

வடசென்னையில் அ. இ. அ. தி.மு.க.பொலிஸ்ஏஜென்டாக கடமையாற்றிய ஒருவர் தமக்கு நெஞ்சு வலிக்கிறது என்று கூறியதும் அவர் உடன் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானுர்.

பீஹாரிலும், உத்தரப் பிரதேசத்திலும் வாக்களிப்புகள் இன்று காலை வரை மொத்தம் 42 தொகுதிகளில் வாக்களிப்புகள் நடைபெற்றதாகவும் எனவே வாக்களிப்புகள் முழுவதற்கும் மாலையாகுமெனத் தெரிவிக்கப்பட்டது.

மஹாராஷ்டிராவில் 112 வயது நிரம்பிய மூதாட்டி ஒருவர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டார்,

### பரஸ்பரக் குற்றச்சாட்டு

இது இவ்வாறு இருக்க,தமது கட்சி வேட்பாளரும், ஆதரவாளர்களும் வீணை சிரமங்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும், விஷமத்தனங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என்று ஆளும் காங்கிரஸ் கட்சிகளும், ஜனதா கட்சியினரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்,

பம்பாயில் ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் செய்தி நிருபர்கள் மத்தியில் பேசுகையில் 'ஜனதா கட்சிக்கு மகத்தான வெற்றி நிச்சயம்' என்று தெரிவித்தார். (உ)


தொழிற்சாலையில் இருந்து புதிதாக முழுமையான உடைபடாத இயற்கை எண்ணெயில் தகரங்களில் அடைக்கப்பட்ட

'சாடின்ஸ்' மீன்

16 அவுன்ஸ்




ஒருதென்ஆப்பிரிக்கத் தயாரிப்பு

எல்லா மளிகைக்கடைகளிலும் கிடைக்கும்.

வியாபாரவிசாரணைகளுக்கு;

சென்.அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்லிமிட்.

516, ஸ்கின்னஸ்ரேட் தெற்கு

கொழும்பு-10

போன்: 24261-5



# "ஆட்சிவேறு, சினிமாவேறு எம். ஜி. ஆருக்கு இது தெரியவில்லை"

## கருணாநிதி பேட்டி

[நமது விசேஷ நிருபர்]

"மத்தியில் காங்கிரஸ், முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறது. காந்திமகான் கண்ட இந்தியாவும், நேரு கண்ட நவபாரதமும் இன்று உருமாறிவிட்டது சர்வாதிகார ஆட்சிநடத்தி இந்திய மக்களைக் கொடுமைப்படுத்தி தீராத அவப்பெயரை ஏற்படுத்திவிட்டார் பிரதமர். பத்தொன்பது மாதங்களாகப் பட்ட கஷ்டத்துக்கு பாரத மக்கள் தெளிவாகப் பதிலளித்து விட்டார்கள். தேர்தல் என்ற ஆயுதம் கொண்டு புரட்சி நடத்திய மக்கள், இம்மாதம் 23-ம் திகதி புதிய ஆட்சியை மத்தியில் காணப்போகின்றனர்கள். மாற்றம் ஒன்று மத்தியில் வேண்டும் என்று பாரத மக்கள் கனவு கண்டார்கள். அதனை இப்பொது நிறைவேற்றிவிட்டார்கள்."

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி 'ஈழநாடு'க்கு அளித்த ஒரு பேட்டியில் மேற்கண்டவாறு விளக்கமளித்தார். தேர்தல் சூறாவளிப் பிரசாரத்தின் போது சிரமம்பாராமல் சில நிமிடங்கள் எனக்கு அளித்த பேட்டியில் மேலும் அவர் தெரிவித்ததாவது:

"தவறானதொரு பாதையில் இந்தியா சென்றுகொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் விடிவெள்ளியாக முளைத்தது தான் ஜனதா முற்போக்குக் கூட்டணி. தமிழ்நாட்டில் ஜனதா பெரும்பான்மை வெற்றிபெறும். உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும், ஒரிஸாவிலும் இந்திரா அணிக்கு பெரும்பான்மை கிடைக்காது. இந்திய மக்களுக்கு காங்கிரஸ் சலித்துவிட்டது. புதிய மாற்றத்தை ஏற்படுத்த மக்கள் விரும்புகின்றனர்கள். இந்த உண்மையை மறைக்கமுடியாது. இது இந்திரா அணிக்கும் தெரியும்."

ஜனதா முற்போக்குஅணி ஆட்சிக்கு வந்தால் தி. மு. க. வுக்கு பதவி கிடைக்குமா என்று கேட்டேன்.

"இது பின்னர் செய்ய வேண்டிய முடிவு. நாங்கள்மிகவும் பொறுமையானவர்கள், உறுமிவந்தபுலியையும்பாய்ந்து வந்து மார்பில் பாய்ந்த வேலையும் கண்டது தி. மு. கழகம். ஜனதா ஆட்சி நிச்சயமானது. தலைவர்கள் சந்தித்து ஆட்சி அமைப்புப்பற்றி முடிவு செய்வதுதானே வழக்கம். அப்பொழுதுதான் தி. மு. கழகம் தனது நிலைபற்றிக் கூறும். களம் பல கண்ட கழகம் எப்பொழுதுமே பதவிகளில் அதிக அக்கறை காட்டுவதில்லை. மேலும் தி. மு. க. பொதுக்குழு செய்யவேண்டிய முடிவு இது" என்று கலைஞர்பதிலளித்தார்.

"திகதி குறிப்பிட்டு நீங்கள் கைதுசெய்யப்படப்போவதாக எம். ஜி. ஆர். கூறியிருக்கின்றரே?" என்றதும் அவர் சிரித்துக்கொண்டே;

"இது என்ன சினிமாவா, ஸ்ரண்ட்போட? ஆட்சி வேறு சினிமா கூத்து வேறு. இது புரியாமல் தடுமாறுகின்றர்" என்று கூறின.

"ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் தி. மு. கழகம் இணையும் என்று கூறப்படுகிறதே?',

"திட்டவட்டமாக இதனை மறுக்கின்றேன். தி, மு. கழகம் தனித்துவம் வாய்ந்தது. பல தடவைகளில் மற்றைய கட்சிகளின் ஆட்சிக்கு பக்கபலமாக இருந்திருக்கிறது. ஆனல் இணைந்ததில்லை. இதனைத்தான் தி. மு. கழகம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கும்" என்று பதிலளித்தார்.

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டில் சட்ட சபைத் தேர்தல் நடக்குமா? என்றேன்.

"நிச்சயமாக எதிர்பார்க்கலாம். தி. மு. கழகம் மீண்டும் ஆட்சிக்கு வரும்" என்று கலைஞர் கருணாநிதி கூறினர்.

"தமிழக மக்கள் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. கடந்த 19 மாத காலத்திலும் அனுபவித்த கொடுமைகளுக்கு 19-ம் திகதியே பதிலளித்துவிட்டார்கள். 'மிசா' கொடுமையை நான் வர்ணிக்கத்தேவையில்லை. மக்கள் உணருவார்கள். கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பத்தை தமிழக மக்கள் சரியாகப் பயன்படுத்திவிட்டார்கள். நாடு நலம்பெற மக்கள் வாழ்வு வளம்பெற ஜனதா கட்சியையே இந்திய மக்கள் தேர்ந்தெடுப்பார்கள். இது உறுதியானது. இந்திரா அணியின் திடீர் வேட்டுகள் மக்கள் முன் செல்லுபடியாகாது" என்று திரு. கருணாநிதி கூறிமுடித்தார்.



# "கருணாநிதி பேசவில்லை; இப்போது உளறுகிறார்"

## எம். ஜி. ஆர். பேட்டி

[நமது விசேஷ நிருபர்]

"பாரதநாடு ஒரு புண்ணிய நாடு. இங்கு தலை தூக்கியுள்ள தேசவிரோத சக்திகளுக்கு மக்கள்முன் செல்வாக்கில்லை. ஜனதாவும் பகல் கனவு காணுகிறது. ஊழலும் கொள்ளையும் நிறைந்தஜனதாகோஷ்டி ஒரு காலத்திலும் இங்கு ஆட்சி அமைக்கமுடியாது. இந்த விஷப்பாம்புகளுக்கு பாரதமக்கள் பாலூட்டமாட்டார்கள், அடித்துக்கொல்லுவார்கள். பதவிஆசைபிடித்துக் கனவு காணும் மொரார்ஜி தேசாய் ஒருகாலத்திலும் பிரதமராக முடியாது!" என்று அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகப் பொருளாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 'ஈழநாடு'க்கு அளித்த பேட்டியில் கூறினர்.

ஜனதா கட்சி ஆட்சிக்கு வருமா என்று கேட்டேன்.

'அது ஒரு கட்சியல்ல. இந்த நாட்டை விழுங்கவந்த விஷப் பாம்பு. மொரார்ஜி ஒரு இந்திவெறியர். ஜனநாயகத்துக்கு மாறானவர்கள். காந்தியைக் கொன்றவர்கள்; காமராஜரைக் கொலைசெய்யநினைத்தவர்கள் ... ... இவர்களுடன் பாரதமக்கள் இணைவார்கள்?' என்று எம். ஜி. ஆர். கேட்டார்.

"கருணாநிதியின் தி. மு. கழகம் ஊழல் கட்சியாகிவிட்டது. கருணாநிதி உற்பட பல மந்திரிகள்மீது விசாரணை நடைபெற்று, ஊழலில் சம்பந்தப்பட்டதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலிருந்து விரட்டப்படும் தி. மு. கழகம், இன்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜனதா கும்பலுடன் ஒட்டியுள்ளது. ஊழல் பேச்சு இன்று மறையலாம். ஆனல் காங்கிரஸ்கட்சி ஆட்சிக்குவந்ததும் கருணாநிதியின் கைகளில் விலங்கு மாட்டப்படும். இவருடன் எட்டு முன்னாள் அமைச்சர்களுக்கும் சிறைகாத்திருக்கிறது. இவர்கள் தப்பமுடியாது' என்று திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கூறினர்.

'காங்கிரஸ்கட்சி மீண்டும் ஆட்சிக்குவரும் என்று கூறுகின்றீர்களா?' என்று நான்கேட்டபொழுது 'காங்கிரஸில் ஊறியவர்கள் பாரத மக்கள். தங்களின்வழிகாட்டி காங்கிரஸ் தான் என்பது அவர்களுக்குத் தெரியும். நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் காங்கிரஸைவிட வேறுகட்சியை மத்தியில் அமர்த்தமாட்டார்கள்' என்று உறுதியாகக் கூறினர்.

'தமிழ்நாட்டில் காங்கிரஸ் கூட்டணி வெற்றிபெறுமா?' என்று கேட்டதும் 'பொறுத்துப்பாருங்கள். எல்லாம் எங்களுக்கேதான் கிடைக்கும்' என்று கூறினர்.

'காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெறுமா" என்று கேட்டேன்.

'நிச்சயமாக நடக்கும். இங்கேயும் 'காங்கிரஸ் கூட்டணி போட்டியிட்டு வெற்றிபெறும்' என்று பதிலளித்தார்.

'பாரதத்தில் ஆட்சிமாற்றம் ஏற்படுவதை மக்கள் விரும்புகிறார்களா?

'அதெல்லாம் கருணாநிதியின் கட்டுக்கதை. இவரை எனக்கு நன்றாகத் தெரியும். எந்தெந்தநேரத்தில் என்னென்ன பேசுவார் என்பதை நானறிவேன். அவர் இப்பொழுது பேசுவதில்லை. உளறுகின்றார். கருணாநிதி திட்டங்கள் தமிழ் நாட்டில் இனிச் சரிவராது. அந்தக்காலம் மலையேறிவிட்டது' என்று எம். ஜி. ஆர். கூறிமுடித்தார்.

### காரசாரமாக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்படி உங்களுக்கு எழுதுவது ஒரு குற்றம் என்பது எனக்குத்தெரியும். இந்தக் கடிதம் உங்களுக்கு கிடைத்தவுடனேயே 'மிசா' வேட்டை நாய்கள் என்னைத் தேடிக் கொண்டுவரும். ஆனல் அவை என்னை உயிருடன் பிடிக்க முடியாது. உங்களுடைய மிசா பூதத்தின் பலி பீடத்தில் இந்த உடலை நான் பலியிடுகின்றேன்" என்று அவர் தமது கடிதத்தை முடித்திருக்கிறார்.


# தலை போகிறதா






பாடசாலை செல்லும பிள்ளைகளின் நாய்மார்களுக்கு அப்படித்தான்... ஆனல் கெமெக்ஸேனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால் அப்படியிருக்கத்தேவையில்லை. தலைப்பேனை முற்றாக ஒழிக்க துரிதமான, நம்பிக்கையான வழி அதுவே. உங்கள் பிள்ளைகளின் தலையில் கெமெக்ஸேனை ஒரு தடவை உபயோகித்தால் போதும்- பேன் முற்றாக அழிந்துவிடும், மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3 வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள் கெமெக்ஸேன் பாதுகாப்பானது, புண்படுத்தாதது. இதமான வாசனையுடையது.

கெமிககல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல வீதி, கொழும்பு-1.
டெலிபோன்: 28421-6.

வின்ஸர் (யாழ். நகர்)
அடுத்த வெளியீடு
சிவாஜி (இரு வேடங்களில்)
சௌகார் ஜானகி, உஷா நந்தினி,
வி. கே. ராமசாமி, சசிகுமார்
நடித்த
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: P. மாதவன்
கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
அபூர்வ ராகங்கள்

REGAL (JAFFNA) Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Pierre Richard, Bernard Blier, Jean Rochefort
in
The Tall Blond Man With One Black Shoe
(SPY COMEDY) (Eastman Color)

ராணி [யாழ்நகர்]
கண்ணப்பா - அஞ்சலிதேவி
நடித்த
தினசரி 4 காட்சிகள்
டவுண் பஸ் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஃ சிவாஜி (இருவேடம்)
ஃ ஜெயலலிதா ஃ சுந்தரராஜன்
நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் இப்பொழுது நடைபெறுகிறது!
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ சுஜாதா
ஃ ஸ்ரீகாந்த் ஃ மனோரமா
நடித்த
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவகுமார் — ஜெய்சித்ரா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
(புதிய பிரதி)

## தவக்கால நற்சிந்தனை

"இயேசுக் கிறீஸ்துப் பெருமானை அடியொற்றிப் பின் தொடரும் உண்மையான சீடர்கள், ஆயிரமாயிரமாய் எழும்ப வேண்டும். இயேசு சுவாமியைப் போல் வாழ்ந்து வழி காட்டும் புனித அன்புத் தியாகிகள் ஆயிரம் ஆயிரம் வேண்டும். இயேசு நாதரைப் போல் தன்னலங்கருதப் பிறர்க்குரியார்கள், ஆயிரம் ஆயிரம் வேண்டும். இயேசுக்கிறிஸ்துவின் அகிம்சா வாழ்க்கையை வாழ்ந்து காட்டும் மாகன்கள் ஆயிரம் ஆயிரம் வேண்டும். இயேசுநாதரைப் போல் பற்றற்ற முற்றும் துறந்தமுனிவர்கள் ஆயிரம் ஆயிரம் வேண்டும். இயேசுக் கிறிஸ்து என்னும் அன்பு அவதாரம் இந்தியா வெங்கும், பட்டணமெங்கும், கிராமமெங்கும், நாடெங்கும் தோன்ற வேண்டும். கிறிஸ்துவத் தொண்டர்கள் எங்களுக்குத் தேவை. அவர் இந்திய மக்களின் இதயத்தை ஆட்கொள்வாராக"
—சுவாமி விவேகானந்தர்.

என்று எத்தனைத் துணிச்சலாக வெள்ளை உள்ளத்தோடு கூறியிருக்கிறார்! நம் மதத்தை விடப் பிறமதத்தை மட்டுமன்றி அம்மதத்தின் ஆசாரியனையும் வாயார, மனமார, வாழ்த்துவதென்பது சாதாரண மனிதனுக்கு இருக்கக்கூடிய இதயமன்று. இந்தப் புனித வாக்கிலிருந்து விவேகனேந்தரும் ஓர் ஒப்புயர்வற்ற சர்வ சமய சமரசக் கொள்கைக்காகப் பெரிதும் பாடுபட்டுருக்கிறார், என்பது புலனாகிறது.

இந்தபசுகாலத்திலேஎம்கர்த்தரின் பாடுகளைச் சிந்திப்போமாக!-(ஞானஒளி)

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-ஜமுனா
நடித்த
மருதநாட்டு வீரன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி—பத்மினி
கோடீஸ்வரன்

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
எங்க பாட்டன சொத்து

# வி. பி. — மாவை சேனதி பேச்சுவார்த்தை விபரம்

## டாக்ஸிக்காரருக்கு இளைஞர் பேரவை நிதிதிரட்டும்

யாழ்ப்பாணம், திங்கள்
வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய பிரமுகரான திரு.வி. பொன்னம்பலத்துக்கும் தமக்குமிடையில் சமீபத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விபரம் பற்றி இளைஞர் பேரவையின் மத்திய குழுக்கூட்டத்தில் மாவை திரு. சேனதிராஜா எடுத்துக் கூறினர்.

இந்தவிபரங்ள் பத்திரிகைகளுக்கு வெளியிடப்படவில்லை. ]ஆ]

பேரவையின் மத்தியகுழுக் கூட்டம் திரு.சேனதிராஜா தலைமையில் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

### 22ல் நிதி திரட்டுவர்

சமீபத்தில் யாழ்.நகரில் நள்ளிரவில் ஒருகோஷ்டியினர் நடத்தியதாக்குதலில் சேதமடைந்த வாடகைக்காரர்க்காரருக்கு நிதிஉதவியளிக்குமுகமாக இம்மாதம்22-ந்தேதி யாழ்.நகரிலும் சுற்றுப்புறங்களிலும் இளைஞர் பேரவையினர் நிதி திரட்டி இம்மாதம் 27-ந்தேதி யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கூட்டணிச் செயலதிபர் மூலம் வழங்குவதென்றுமுடிவு செய்துள்ளது.

இளைஞர் பேரவையின் எழுச்சி மாநாட்டை மேமாதம் 14-ம் 15-ம் தேதிகளில் மட்டக்களப்பில் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டு கவிஞர் காசிஆனந்தன் தலைமையில் ஒருகுழுவும் நியமிக்கப்பட்டது.

## லக்ஸ்பிரே...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி நீதவான் திரு. இராஜநாயகம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் 2,500 ருபா அபராதம்விதித்துத் தீர்ப்பளித்தார். (அ)

சங்கானை, திங்கள்
இன்று வடபிராந்தியம் முழுவதிலும் நடைபெறவிருந்த ப.நோ.கூ.ச.ஊழியர் சங்க ஊழியர் வேலைநிறுத்தம் திட்டமிட்டபடி நடக்க மாட்டாது என்றும் இத்திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டது. [ஆ]

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி.

சாவகச்சேரி நகரசபைக்கு 1-4-77 முதல் 31-12-77-ந் திகதி வரை கீழ் குறிப்பிடப்படும் குத்தகைக்கான கேள்விப் பத்திரங்கள் 1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 28-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| 1. வண்டி வான் காலைக் குத்தகை | 50-00 | 5-00 |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப் படிவக் கட்டணமும் செலுத்தப்படுவதன் பேரில் 25-3-77-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் திருப்பித்தரப்படமாட்டா. கேள்வி வைப்புப் பணமும் படிவக்கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி கேள்விப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படலாம். அல்லது பதிவுக்கடிதம் மூலம் அனுப்பப்படலாம். எந்த நோக்கத்திற்காக கேள்வி விடுக்கப்படுகிறது என்ற விபரம் கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையில் இடது மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். எந்தவொரு காரணமும் காட்டாமல் கேள்விப்பத்திரங்கள் அனைத்தையுமோ எவற்றையுமோ ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை சாவகச்சேரி விசேட ஆணையாளருக்கு உண்டு.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்ரன் அல்பிரட்,
விசேட ஆணையாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்ற
அலுவலகம்,
சாவகச்சேரி,
18-3-77.
5748

வெற்றி முரசுகொட்டும் 50-வது நாள்

இணையில்லா சாதனை படைக்கும்
மக்கள் திலகத்தின்
மாண்புமிகு சித்திரம்.
மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ எம்.ஜி.ஆர்.
ராதாசலூஜா
வீரப்பா-நிர்மலா
நடித்த
இதயக்கனி
[ஈஸ்ட்மன் கலர்]

RIO (Jaffna) NOW SHOWING Daily 4 Shows
HELL TO ETERNITY
(Color)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி -பத்மினி
லலிதா - பாலையா
நடித்த
தூக்கு தூக்கி (புதிய பிரதி)

ஈழநாடு
The EELANADU

# 'யுத்த களத்தில் நிற்கையில் கட்டுப்பாடு மிகஅவசியம்'

## இளைஞர்களுக்கு 'அமிர்' வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்
தலைவர்கள்செல்லவேண்டிய வேகத்தில் செல்லாவிட்டால் அவர்களை உந்தித் தள்ளவேண்டியது இளைஞர்களின்கடமை. அதற்கும் தலைவர்கள் செல்லாவிட்டால், அவர்களை ஒதுக்கிவிட்டு, இளைஞர்கள் முன் செல்லவேண்டும்.

யாழ். புகையிரதநிலையத்தில் கவிஞர் காசி ஆனந்தனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசிய கூட்டணிச்செயல்அதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது: "தமிழர்கள் இன்று மிக நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றனர். தமிழரின் ஒற்றுமையைச்சிதைத்துவிட சில சக்திகள் முயற்சித்துவருகின்றன. சில பத்திரிகைகளும் பல்வேறுவிதமாகப் பிரசாரம் செய்துவருகின்றன. கவிஞர் காசி ஆனந்தன் பொதுவாகக் கூறிய விஷயத்தை தவருக எடுத்து அவை கூறியிருக்கின்றன. மட்டுநகரில் கவிஞர் ஒரு கருத்தைஎடுத்துக்கூறினர். விடுதலைஇயக்கத்தில் வேகமாக இயங்காதவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர் ஒதுங்கிக்கொள்ளவேண்டும் என்று மட்டுமே கவிஞர் கூறினர். இயங்காமல் இருப்பவன் தாகை இருந்தாலும்சரி விலகவேண்டியதுதான். இளம் சந்ததியினரை முன்னேக்கிச் செல்ல வழிவிட வேண்டும்".

"இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன், கணணியத்துடன் இயங்கவேண்டும். இங்கு நடந்த வரவேற்பின்போதுசில இளைஞர்கள் 'பேச்சுவார்த்தை வேண்டாம்' எனக்குரல் எழுப்பினர்கள். அவர்களை நான் உரிமையோடு கோபித்துக் கொண்டேன். கூட்டணித் தலைவர்கள் நிதானமாக யோசித்த பின்னரே பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டோம். அரசுடனே அல்லது எதிர்க்கட்சியுடனே, வேறு எந்தக்கட்சியுடனே, நமது உரிமைபற்றிப்பேசுவதில் தவறில்லை. அரசிடம் எமது கோரிக்கையை முன்வைத்துப் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். பேச்சுவார்த்தைவேண்டாம் என்றால், அதைநடவடிக்கைக்குழுக்கூட்டத்தில் சொல்லலாம். அங்கும் பேசியிருக்கிறார்கள். பேச்சுவார்த்தையில் என்ன தவறு இருக்கிறது?

இளைஞர்கள் இந்தச்சந்தர்ப்பத்தில் ஆத்திரப்பட்டுச்செயல்படக்கூடாது. யுத்தகளத்தில் நிற்கும்போது கட்டுப்பாடு அவசியம்".

### கரகோஷம் அதிரச்செய்தது

"தலைவரின் விவேகமும், இளைஞரின் வேகமும் சேர்ந்து இயங்கினால்தான் நாம் முன்னேறமுடியும். இரண்டையும் பெற்ற இளம்தலைவராகத் தவப்புதல்வனை கவிஞர் காசி ஆனந்தன் இருக்கிறார்" என்று அமிர்கூறியபோது கரகோஷம் புகையிரதநிலையத்தை அதிரச் செய்தது. (க-அ)

# "அண்ணன் அமிருக்கு இளைஞர்கள் கட்டுப்பட்டவர்களே"

—காசி ஆனந்தன்

யாழ்ப்பாணம், திங்கள்
'72-ம்ஆண்டுக்குப்பின் தமிழ் மக்களின் போராட்டம் புதிய திசையில் திரும்பியுள்ளது. இந்தக்காலகட்டத்தில் தமிழ்இளைஞர்கள் உரிமைகளைப் பெறப் பலவிதத்திலும் முயற்சிஎடுத்து வந்துள்ளார்கள். இந்த இளைஞர்கள், எப்படித்தான்இயங்கி வந்தபோதிலும், அண்ணன் அமிருக்குக் கட்டுப்பட்டவர்களே'.

யாழ். புகையிரதநிலையத்தில் தமக்கு அளிக்கப்பட்டவரவேற்பில் பேசிய கவிஞர் காசிஆனந்தன்மேற்கண்டவாறு கூறினர்.

கவிஞர் காசிஆனந்தன் மேலும் கூறியதாவது: 'தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ் இளைஞர் பேரவையும் கட்டுக்குலையாமல் வளரவேண்டும். நம்ஒற்றுமை எப்போது சிதறுகின்றதோ அன்று தமிழினத்துக்கு அழிவு ஏற்படும்.

"தந்தை செல்வாவின் இயக்கம், அகிம்சை வழியில் சென்று கொண்டிருக்கும் போது தந்தையின் ஆசியையும், அமிர் அண்ணுவின் வாழ்த்தையும் பெற்றுக் கொண்டு, இளைஞர்கள் ஓடும் ஓட்டம், அரசை அதிரச்செய்யும் ஓட்டமாக இருந்துவருகிறது.

"72 ம்: ஆண்டுக்குப் பின், பிளவுபட்டுக்கிடந்த கட்சிகள், கூட்டணியின் கீழ் பேரியக்கமானதென்றும், தமிழ் ஈழ சுதந்திரம் தவிர வேறுவழியில்லைஎனத் தமிழர் முடிவெடுத்தாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கட்டிக் காத்து, தமிழ் ஈழத்தைப்பெற வேண்டும்" என்றும் கூறினர்.

வண்ணை ஆனந்தன், மாவை சேனதிராசா ஆகியோரும் பேசினர்கள் (க-அ)

# லயன் கழகத்தின் மக்கள் சேவை

## தலைவர் மகேசன் விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்
"லயன் கழகம் கடந்தநான்கு ஆண்டுகளாக இந்நாட்டில் செயல்பட்டுப் பல துறைகளில் குறிப்பாக கல்வி, கிராம அபிவிருத்தி மற்றும் பலதுறைகளில் அக்கறை எடுத்து வருகிறது"

யாழ். மத்திய கல்லூரியில் யாழ். எக்ஸ்போ பொருட்காட்சித் திறப்பு விழாவில் பேசிய யாழ். லயன் கழகத் தலைவர் சட்டத்தரணி எஸ். மகேசன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு மகேசன் மேலும்பேசுகையில் கூறியதாவது:- "நமது நாட்டில் சிறிய நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் செய்யும பொருட்களை அறிமுகம் செய்துவைக்க வர்த்தக வங்கியின் உதவியுடன் இந்தப் பொருட்காட்சியை ஏற்படுத்தினேம். வர்த்தகப் பெருமக்கள் இதற்குச் சிறந்த ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

இப்பகுதி மக்களிடையே லயன் கழகத்தினரின் சேவை நல்ல செல்வாக்கைப் பெற்றுள்ளது. இந்த முயற்சியால் பொருட்காட்சி புதிய திருப்பத்தைப் ஏற்படுத்திள்ளது"

திரு. பிரான்சிஸ் வர்ணகுலசூரியா பேசும்போது இப்படியான பொருட்காட்சி உள்ளூர் உற்பத்திகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு மக்களுக்குப் பெரும் வாய்ப்பளிக்குமென்று கூறினர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு.விஜயபாலா பேசும்போது இப்பகுதியில் கடந்த சில வருடங்களாக பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதனல் மக்கள் பலவிதத்திலும் பயனடைந்துள்ளதாகவும் கூறினர். (க-அ)

மாவட்ட லயன்கழகத் தலைவர் திரு. பிரான்சிஸ், ஏ.வர்ணகுலசூரியா விழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றினர் லயன் கழகம் மனித சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவையை அவர் தமது பேச்சில் விளக்கினர்.

யாழ் லயன் விளையாட்டுக் கழகத்தலைவர் திரு. சி. மகேசன் யாழ். அரசாங்க அதிபர் டபிள்யூ ஏ. எப். விஜயபாலா மாவட்ட லயன் கழகத்தின் தலைவர் திரு. பிரான்சிஸ் ஏ. வர்ணகுலசூரியா ஆகியோருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர்.

இவ்வைபவத்தில் திரு. பிரான்சிஸ், ஏ. வர்ணகுலசூரிய தொடர்ந்து உரையாற்றுகையில் புற்றுநோய் ஆஸ்பத்திரி நிதிக்காக சிறந்த முறையில் இவ்விழாவை நடாத்த முன்வந்த விளையாட்டு அமைப்புக்குழு உறுப்பினர்களையும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ள வந்தமக்களையும் பாராட்டினர்.

யாழ். அரசாங்க அதிபர் திரு விஜயபாலா பேசுகையில், வட பகுதியிலுள்ள புற்றுநோயாளரின் கஷ்டத்தை நீக்கும் பொருட்டு யாழ் லயன் கழகத்தினர் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்க முன் வந்ததற்குப் பாரட்டுத் தெரிவித்தார். (ஆனே. நி. அ)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ் லயன் களியாட்டு விழா விளையாட்டு நிகழ்ச்சிகள் யாழ். துரையப்பாவிளையாட்டரங்கில் நேற்று முன்தினம் காலைஆரம்பமாகின. இலங்கை

# "பிரதேச வளர்ச்சிக்கு உதவும் பொருட்காட்சி"

## வர்த்தக வங்கி இயக்குநர் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்
'ஒரு நாட்டின், குறிப்பாக வளரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியானது அந்தப் பிரதேசத்தின் வளர்ச்சியிலேயே பெருமளவு தங்கியுள்ளது. அந்த வகையில் இந்தப் பிரதேசத்தின் கைத்தொழில் வளர்ச்சிக்கு இந்தப் பொருட்காட்சி குறிப்பிட்டளவு பங்களிப்பைச் செய்யும் என்று நான் நம்புகிறேன.

இவ்வாறு யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமான யாழ். பிரதேச கைத்தொழில் பொருட்காட்சியைத் திறந்து வைத்துப்பேசிய சாட்டட் வங்கியின் முகாமையாளரும், இலங்கை வர்த்தக வங்கியின் இயக்குநருமான திரு. பி.எஸ். மக்னமாரா கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "இந்தப் பிரதேசத்தின் கைத்தொழில் வளர்ச்சிக்கு இப் பொருட்காட்சி மேலும் உதவும் என்று நம்புகிறேன். இந்தப் பொருட்காட்சியை நடத்துவதற்காக யாழ் லயன் கழகத்தை நான் பாராட்டுகிறேன்.

'கடந்த வருடம்உங்கள் கழகம் ஆரம்பமாகி மூன்று வருடங்கள் ஆகியிருந்தபோதிலும் இலங்கையின் சிறந்த கழகமாகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிகிறேன். அதே சாதனையை இவ்வருடமும் நீங்கள் நிகழ்த்துவீர்களென நான் நம்புகிறேன்.

'இப்பிரதேசத்தினதும், மக்களினதும் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவி புரிவது சமூக சேவை இயக்கத்தின் ஒரு சிறந்ததிட்டமாகும்.' (இ)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு அருளம்பலம்

இளைப்பாறிய திருநெல்வேலி விதானையார் கார்த்திகேசு அருளம்பலம் காலமானர். இவர் காலம்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், யாழ்ப்பாணப்பகுதி மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் சோமசுந்தரம், மட்டக்களப்பு கல்வித்திணைக்கள நிர்வாகஉதவியாளர் சிவஞானம், மட்டக்களப்பு விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் கார்த்திகேசு, முகங்கந்தை சரஸ்வதி வித்தியாலய அதிபர் கனகசுந்தரம், திருமதி இலங்கம்மா, காலஞ்சென்ற பரிமளம் ஆகியோரின் தந்தையும் இளைப்பாறிய தபாலதிபர்இராசையாசிவசுப்பிரமணியம், திருமதி இராஜேஸ்வரி, மட்டக்களப்பு தாண்டவன்வெளி பாடசாலை ஆசிரியை பரமேஸ்வரி, இராஜலட்சுமி, ரம்புக்கனை அரசினர் வைத்தியசாலை உதவி வைத்திய அதிகாரி திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் மாமனுருமாவார்.

அன்னரின் பூதவுடல் 118, ஆடியபாதவீதி, நல்லூர் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்கு செம்மணி மயானத்துக்கு இன்று 21-3-77 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

உறவினரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

5752

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna; Telegram: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.

# சாவகச்சேரியில் காசிஆனந்தன்

மட்டுவில், ஞாயிறு
'தமிழ்ஈழம்பெறுவதுஒன்றே தமிழ் இளைஞர்களின் இலட்சியமாகவும், சிந்தனையாகவும் இருக்கவேண்டும்' என்று சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கில் கவிஞர் காசிஆனந்தன் பேசுகையில் கூறினர்.

திரு. எஸ். கே. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கவிஞர் மேலும் பேசுகையில் கூறியதாவது: 'தேர்தல் தமிழ் இளைஞர்களுக்கு ஒருபிரச்சனையானதல்ல. அதைப்பற்றிச் சிந்தனைசெய்யவேண்டிய அவசியமில்லை.

'நம்மத்தியிலுள்ள சாதிப் பிரச்சனைகள் அகலவேண்டும். எனது சொந்தஊரில்கூட சாதி வேற்றுமை நிலவுவதுகண்டு வேதனையுறுகிறேன். தேர்தல் பேச்சடிபடத் தொடங்கியதுமே சாதிப்பூசலும் தலைதூக்கத்தொடங்கிவிடுகிறது.

### கோப்பாயில் நிலை

'கோப்பாய்த் தொகுதியை திரு.சி.கதிரவேற்பிள்ளை பெருந்தன்மையுடன் ஒரு சிறுபான்மைத்தமிழருக்கு விட்டுக் கொடுக்க முன்வந்துள்ளபோதிலும் அங்குவேட்பாளர்குறித்து சிறுபான்மைத்தமிழருக்குள்ளேயே பூசல்கள் தலைதூக்கி வருவது வருத்தத்தைத் தருகிறது.

'நமக்குள்ளேயே சாதிப்பூசல்களை வளர்த்துக்கொண்டால் நாம் சுபீட்சம் விடுதலை காண்பது எங்ஙனம்? எனவே பரந்துபட்ட மனப்பான்மையுடன் நம்மத்தியில் ஒருமைப்பாடு ஓங்கவேண்டும்.

'கூட்டணியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களோ, தலைவர்களோ எவர் தவறிழைப்பினும் அவை தட்டிக்கேட்கப் படவேண்டும். அதற்கு இளைஞர்களுக்கு உரிமைவேண்டும்.

# வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்
வட்டுக்கோட்டை – சங்கரத்தையைச் சேர்த கே. அம்பலவாணர் என்ற வாலிபர் வெட்டிக்கொல்லப்பட்டார்.

நேற்று நடந்த இச்சம்பவம் குறித்து சங்கானைப்பொலிசார் புலன் விசாரணை நடத்துகின்றனர். (உ)

# அறிவித்தல்

சுழிபுரம் பத்திரகாளிகோயில் வருடாந்தப் பொங்கல் வேள்வி வைபவம் (22-3-77)செவ்வாய் மாலை தொடக்கம் புதன்கிழமை காலை வரையும்நடைபெறும். சென்ற வருடம் நடைபெற்றதுபோல் பொங்கல் பூசை நடைபெறும். மாமிசவகைகள் சமைக்கவோ கோயில்முன் படைக்கவோ அனுமதிக்கப்படமாட்டாது என்பதை இத்தால் அறியத்தருகின்றேம்.

இங்ஙனம்
கோயில் பரிபாலன சபையினர்

சுழிபுரம் பத்திரகாளி கோயில்
சுழிபுரம்
20-3-77

5753